சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 6 | இதழ்: 11 | ஏப்ரல் - 2025 | விலை - ரூ.20/-

VOL:6 | ISSUE: 11 | April - 2025 | Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-6 மலர்-11 ஏப்ரல்-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குடிநீதையேம்ம

உனது உடலின் முழு உரிமை யாளர் பஞ்ச பூதங்களே! ஒவ்வொரு உயிரினமும் இந்த பூமிக்கு வருவ தற்குண்டான காரணம் ஏற்பட்டவுடன், பஞ்ச பூதங்களால் இந்த சரீரம் உருவாக்கப்படுகின்றது. வந்த காரணம் முடிந்தவுடன் உடலை பஞ்ச பூதங்களே எடுத்துக் கொள்கின்றன. அதற்குப் பெயர்தான் மரணம்.

ஆகவே நான் என்பது இந்த உடல் அல்ல என்பதை நீ உணரவேண்டும். இந்த உடல் என்பது இந்த பிறவியில் நீ நடிப்பதற்காக கொடுக்கப்பட்ட ஆடையாகும். இன்பம், துன்பம் இரண்டும் இந்த உடலுக்குத்தானே தவிர ஆன்மாவிற்கு அல்ல! இதை அறிந்து கொண்டு இந்த வாழ்க்கையை எதிர் கொண்டால் நீ பேரானந்த பெருநிலையை அடையலாம்.

எனவே, புறவழிபாட்டில் கவனம் செலுத்தாமல், அக வழிபாட்டில் கவனம் செலுத்துவாயாக! புற வழிபாட்டிற்கு, நேரம், பொருளாதாரம், வாய்ப்புகள் தேவை. அகவழிபாட்டிற்கு இவை எதுவும் அவசியமில்லை. நீ மனம் வைத்தால் போதுமானது. நீ என்ன செய்து கொண்டிருந்தாலும் மனம் என்னையே நினைத்துக் கொண்டிருந்தால் அதுவே அகவழிபாடு ஆகும்.

இந்த பூமியில் நீ சாதிப்பதற்காக பிறந்திருக்கின்றாய். உனது வாழ்க் கையை அர்த்தமுள்ளதாகவும், வளமானதாகவும் மாற்றத்தான் நான் ஒவ்வொரு நிமிடமும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். நீ எப்பொழுதும் என் நாமத்தை சொல்லிக் கொண்டே இரு. மற்றதை நான் பார்த்துக் கொள்கின்றேன்.

-பகவான் சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் பேரருளால் என்பத்தி ஒன்றாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். சென்ற இதழின் வெளியீட்டு விழா, 02.03.2025 ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 10 மணிக்கு புத்தக வெளியீட்டு விழா இனிதே துவங்கியது. இம்மாத இதழை ஆன்மீக எழுத்தாளர் திரு. ரகுராமன் அவர்கள் வெளியிட, சாயி நேசர் திரு.ஜெய சந்திரன் சாய் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவை திரு. இராஜசேகர் அவர்கள் தொகுத்து வழங்க, திரு. கலியன் சாய், திருமதி.மாதங்கி பாலாஜி, திரு.பாலாஜி, திரு. நாராயணன், திரு.அகஸ்டின், திரு. பிரபு, திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம் ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர்களிடம் பகிர்ந்து கொண்டனர். விழாவில், திரு. கோபால் சாய்ராம், திரு. ரமேஷ் குமார், திரு. ஜெயசந்திரன், திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார் மற்றும் சாயி பக்தர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திரு. பாலாஜி தலைமையிலான ஆத்மஞானியர் குழுவினர் குரு அவர்களுக்கு மாலை மரியாதை செய்வித்து குரு காணிக்கை





அளித்தனர். விழாவினை திரு. அகஸ்டின் அவர்கள் ஒருகிணைத்து சிறப்புற நடத்தினார். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு அளித்து மகிழ்ந்தனர் ஆத்ம ஞானியரின் அன்னதானக்குழுவினர்.

நமது சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்திற்கு திருமதி. சாந்தி வெங்கடாசலம் அவர்கள் பக்தர்கள் பங்களிப்பாக ரூ.9000 ஆயிரமும். தனது பங்காக ரூ.25000மும் சேர்த்து மொத்தம் ரூ. 34000 ஆயிரத்தை காசோலையாக ஆசிரியரும் நமது குருவுமான யோகி ஸ்ரீராம் பாபாவிடம் வழங்கினார்கள்.

ஆத்ம ஞான பீடத்திற் குண்டான நிதியைப் பெற்றுக்





கொண்ட ஆசிரியர் அவர்கள், விரைவில் அடுத்த வருட இறுதிக்குள் ஆத்மஞான பீடம் அமையும் என்ற நல்ல செய்தியைக் கூறி அதற்காக இதுவரை காணிக்கை அளித்தவர்களுக்கு தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

விழுப்புரத்தைச் சேர்ந்த திரு. கதிரவன் அவர்கள் இரண்டு, மூன்று வருட சந்தாவினையும், தஞ்சை திரு. சேகர் அவர்கள் இரண்டு ஒரு வருட சந்தாவினையும் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளார்கள். அவர்களும், அவரது குடும்பத்தினரும் எல்லா நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

நமது சாய் தியானாலயா ஆத்மஞான பீடம் சார்பில் நமது ஆசிரியரும், குருவுமான யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின்

"மௌனத்தின் மூலம் தவம்"

என்ற 10 வார ஆன்லைன் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. இதில் யோகா, கிரியா, மௌனம், ஆத்மஞானம், குண்டலினி தவம் போன்றவை கற்றுத்தரப்படுகின்றன.

ஆர்வமுள்ள அன்பர்கள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு, பயன்பெற வேண்டுமாய் பேரன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மன நிம்மதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

அன்புடன் ஆசிரியர்

ஓம் சாய்ராம்

சாய் அன்பர்கள் அனைவரையும் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்...

சத்குரு சாய்நாதரின் பரிபூரண ஆசியுடன் நமது ஆன்மீக வாழ்வில் வலிமை சேர்க்கவும், பல ஆண்டுகளாக சாய் சத்சரிதத்தை பாராயணம் செய்து வரும் அன்பர்கள் வாழ்வினில் அடைந்த மாற்றங்களையும், ஏற்றங்களையும் நமக்கு நாமே விசாரணை செய்து தெளிந்து முன்னேறும் அற்புத வாய்பாகவும் ஓர் அரங்க ஆலோசனை கூட்டியுள்ளோம்.

சாய் சத்சரிதத்தில் சாய் காட்டும் மூன்று அற்புதமான வழிகளான

கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம், ஞான மார்க்கம்,

ஆகிய மூன்று வழிகளைப் பற்றி மூன்று முக்கிய அனுபவஸ்தர்கள் ஆய்ந்து உரை நிகழ்த்த உள்ளார்கள். மூவரில் ஒருவராக நமது குண்டலினி யோக குரு

திரு. ஸ்ரீராம் பாபா

அவர்களும் உரை நிகழ்த்த இசைந்துள்ளார்கள்.

இந்த சிந்தனையைத் தூண்டி நல்வழிப்படுத்தும் உரை நிகழ்வுக்கு அனைத்து சாய் அன்பர்களும் நண்பர்களுடன் கை கோர்த்து வந்திருந்து பயன்பெற வேண்டும் என ஆத்மார்த்தமாக வேண்டுகிறோம்.

நாள் : 19.07.2025 சனிக்கிழமை

நேரம் : மாலை 5 to 8

இடம் : பாரதீய வித்யா பவன்

கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை.

அன்புடன்:

உங்கள் சுந்தர் சாய்

போன் : 9789404451.

(இந்நிகழ்விற்கு சிறு துளி பெருவெள்ளமாய் உதவிட அனைவரிடமும் ஆதரவைக் கோரி அன்போடு வரவேற்கிறோம்.)

தொடர் - 22

திருவருள் தேடி

சாய் அன்பர்கள் அனைவருக்கும் வணக்கம். குரு வாழ்க! குருவே துணை! என வணங்கி போன இதழில் நமது முதல் ஷீரடி பயணம் பற்றிய அனுபவத்திலிருந்து தொடர்வோம். கிடைத்தற்கரிய சாய் தரிசனம் முடிந்து வந்தது முதல் சாயியே எல்லாம் என உணரத் தொடங்கும் வரை பல புண்ய ஸ்தலங்கள் கோயில்கள் என சுற்றிய நமக்கு சுகப்ரம்ம மகரிஷி, மற்றும் திருவண்ணாமலை ஸ்ரீ ஷேசாத்திரி சுவாமிகள் அவர்களுடைய நெருங்கிய அடியார்களுடன் தொடர்பு ஏற்பட்டு பல அற்புத அனுபவங்களும் நிகழ ஆரம்பித்தது.



இவையெல்லாமே ஒவ்வொரு கால கட்டங்களிலும் நம்மைத் தொடர்ந்து வழிநடத்தி வந்த பிரபஞ்ச ஆற்றலின் ஏற்பாடாக இருக்க வேண்டும் என்பது எமது எண்ணம். ஒரு வேளை நமது முன் ஜென்ம தொடர்பின் மிச்சங்களாக கூட இருக்கலாமோ என்னவோ. ஆனால் யாமறிந்த ஆன்மீக வாழ்விற்கு நிச்சயமாக உரம் இட்டு வளர்த்த அனுபவங்கள் என்பதே உண்மை.


கிடைத்த வேலைக்கு நடுவே, இடைவெளியை நன்கு உபயோகித்து சாய் சத்சரித பாராயணம் செய்யத் தொடங்கி அதில் நன்கு ஈர்க்கப்பட்டு, பின் நாட்களில் ஒரு குழு அமைத்து பாராயணம் செய்வதில் முழு ஆர்வத்துடன் ஈடுபட்டேன். அதிகமாக ரயில் பிராயாணங்களின் பொழுதும் கையில் சத்சரித பாராயணம் நமக்கு துணை வந்தது. பாபா பக்தர்களின் அற்புத அனுபவங்கள் நம்மை மிகவும் ஈர்த்தது என்றே சொல்லலாம்.

அந்தக் காலக் கட்டத்தில் இவை எல்லாமே உண்மை தானா, மிகைப்படுத்தப்பட்டனவா என்ற சந்தேகங்கள் அவ்வப்பொழுது வந்து போனது. சத்யசாய் பகவான்

கருணையினால் என் வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களே எனது சந்தேக எண்ணங்களுக்கு தீர்வு தந்தது எனலாம். இவையெல்லாம் எப்படி, எதற்காக நிகழ்கிறது? என பல எண்ண ஓட்டங்கள் நம்மை ஆட்டிப்படைத்தது.

இவையெல்லாம் நாம் ஹைதராபாத்தில் வாழ்ந்த காலங்களின் நிகழ்வுகள். அப்பொழுது சென்னையில் சாய் பக்தியுடன் கூடிய நண்பர் அறிது. வாசுதேவன் என்ற ஒத்த சிந்தனையுடைய நண்பர், நம்மை விட 6–7 வயது மூத்தவர் இருந்தார். அவருடன் ஆன்மீக பயணங்கள் செய்திருக்கிறேன். முதன்முதலாக திருவண்ணாமலை கிரிவலத்திற்கு அவருடன் சென்றேன். ஸ்ரீ ஷேசாத்திரி சுவாமிகள் சமாதி ஆலயத்தில் உள்புறம் அமைந்த உமா தேவி அம்மையாரின் ஜீவ சமாதியில் வணங்கி ஆன்மீக முன்னேற்றத்திற்காக வேண்டிக் கொண்டு, கிரிவலம் தொடங்கினோம்.

சிறிது தூரம் சென்றவுடன் ஒரு 20 வயதுக்குள் ஒரு இளைஞன், அரை நிஜாருடன் சிறிது வித்தியாசமான செய்கைகளுடன் தோன்றினார். அவர் என்னிடமிருந்து ஒரு வாழைப்பழத்தை வாங்கி சாப்பிட்டு விட்டு எங்களை பக்தி பாடல்கள் பாடிக்கொண்டே செல்வோமா என்று கைதட்டிக் கொண்டே பாட (கத்த?) ஆரம்பித்தார். இது என் நண்பரான வாசுவை இடையூறு செய்தது. ஏனெனில் அவர் விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்லிக் கொண்டு நடந்தார்.



சுந்தர் சாய்
9789404451

அவர் இந்த பாடல்களில் ஈடுபாடு காட்டவில்லை. ஆனால் அவரையும் பாடச் சொல்லி அந்த இளைஞர் வற்புறுத்தியதால், நான் அந்த இளைஞரை தவிர்க்க ஆரப்பித்தேன். அவர் என்னிடம், ஏன் பயப்படுகிறாய்? நான் உன்னுடன் வரட்டுமா? என கேட்க நான் அவரிடம் ஊர் ஊராக திரிகின்ற வேலையில் இருப்பதால் அது சரிபட்டு வராது என்பதற்காக நான் தவிர்த்தேன். அவரும் உடனே எங்களிடமிருந்து விலகிவிட்டார்.


மனதளவில் ஏதோ ஒரு நெருடல் மட்டும் இருந்தது. ஏதோ ஓர் அரிய வாய்ப்பை நாம் தவறவிட்டது போன்று. பின்னாளில் ஒருவர் நம்மை சோதிக்க ஒரு சித்தர் தான் அவ்வடிவில் வந்தார் என்றும் இன்னும் லௌகீக வாழ்வில் கடமைகள் இருந்ததால் சித்தர் வழிபாடு கைகூடவில்லை என விளக்கினார். நம் அக வாழ்வில்

"காலம்" என்பது எவ்வளவு வலிமையானது என்பதை உணர்ந்த தருணம் அது.

காலம் கனிந்து கிடைக்கின்ற ஒன்றே நிலையானது, அன்றி நாமாக எவ்வளவு பிரயாசைப் பட்டாலும் முடிவு காலத்தின் படியே இருக்கும். நாம் திருவண்ணாமலை ஸ்ரீ ஷேசாத்திரி சுவாமிகள் சரிதம் வாங்கி படிக்க ஆரம்பித்து, மாடம்பாக்கத்தில் உள்ள தேனுபுரீஸ்வரர் மற்றும் 18 சித்தர்கள் கோவிலுக்கும் சென்று வழிபாடு செய்தோம். அத்துடன் ஸ்ரீ சுகப்பிரம்ம மகரிஷி ஆஸ்ரம பூஜை விசேஷங்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் வலம் வந்தோம்.

இரண்டு – மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளிநாடு சென்று வியாபார விஷயங்களையும் கவனித்து ஓரளவு முன்னேற்றமும் அடைய முடிந்தது. சாய் சத்சரித பாராயணம் தொடர்ந்து செய்து வந்த பொழுதும், பின்னர் ஷீரடி செல்ல வாய்ப்புகள் வந்த பொழுதும் மிகுந்த ஆர்வத்துடன் நண்பர்களுடன் பாபா சமாதி மந்திர் தரிசனம் மற்றும் சத்சரிதத்தில் உள்ளது போன்று கண்டோபா ஆலயம், துவாரகாமாயி, சாவடி, அனுமான் மந்திர் மற்றும் சனி சிங்கனாப்பூர், திரயம்பகேஸ்வர், பஞ்சவடி என எல்லா இடங்களையும் சென்று தரிசித்து வந்தேன்.

எப்பொழுதும் 3 இரவுகள் புண்ணிய தலங்களில் தங்குவது நல்லது என நண்பர் ஒருவர் அறிவுறுத்தியபடி எல்லா



பயணத்திலும் 3 நாட்கள் தங்கி சில முறை 10–12 தடவை ஒரே நாளில் சமாதி மந்திர் தரிசனம் செய்யும் அளவிற்கு ஆர்வத்துடன் சுற்றி சுற்றி சுறுசுறுப்பாய் வலம் வருவதில் ஓர் தனி இன்பமான அனுபவம்.

அந்த நாட்களில் ஷீரடி தரிசன வரிசை மற்றும் பக்தர்கள் கூட்டம் இவற்றில் இன்றளவிற்கான நெருக்கடி கிடையாது. அதே போன்று தாராளமாக "உதி பாக்கெட்" கிடைக்கும். ஒவ்வொரு ஷீரடி பயணத்தின் பொழுதும் நமக்கு கிடைத்த அனுபவங்கள் அற்புதங்களாக அமையவே நமக்கு ஷீரடி சாய்பாபாவிடம் ஏற்பட்ட தொடர்பு அடையாளம் காண

முடியாத ஒன்றாய் அமைந்தது.

பாபா கூறியபடி "குருசரித்திரம்" பாராயணம் செய்ய வேண்டும் என்ற உந்துதல் ஆழ்மனதில் பதிந்திட, ஹைதராபாத்தில் தமிழ் புத்தகம் கிடைக்கும் இடங்களில் எல்லாம் தேடத் தொடங்கினேன். ஆனால் எங்கும் கிடைக்கவில்லை. எனக்கு ஆங்கில மொழியில் இது போன்ற நூல்களைப் படிப்பதில் ஆர்வம் இல்லை. எனவே சென்னைக்கு வரும் பொழுது முயற்சி செய்ய முடிவு செய்தேன்.

இதற்கிடையில் எனது தாயார் உடல்நலம் பாதிக்கப்படவே, கவனம் முழுவதும் அவர் மருத்துவ தேவை மற்றும் அவருக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து கவலை கொள்ள வைத்தது. அவருக்கு நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு மூளையில் ஓர் அழற்சி அது தொடர்பான பக்க விளைவுகள் என முழு நேரமும் அவரை கவனிக்க வேண்டிய சூழ்நிலையில் 2–3 வருடங்கள் அவருடனேயே இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சாய் சத்சரித பாராயணம் மட்டும் தொடர்ந்தது. என் குடும்பத்துடன் (மனைவி, மகன் மட்டும்) ஷீரடி செல்லும் வாய்ப்பு கிடைத்தது. எனக்கு இருந்த அபரிமித ஆர்வம் தனக்கு ஏற்படவில்லை என என் மனைவி தெரிவிக்க, நான் அது உனக்கும், சாய்பாபாவிற்கும் உள்ள உறவு நான் அதில் தலையிடவில்லை என்று கூறினேன் ஷீரடிக்கு வேண்டுமானால் நாம் அழைத்துக் கொண்டு செல்லலாம் ஆனால் பாபாவிடம் பக்தியை நாம் புகட்ட முடியாதே!

காலம் அதையும் மாற்றி அமைத்தது ஓர் அற்புத அனுபவம்." மற்றவர்கள் என் மீது பக்தி செலுத்தவில்லை என்றாலும், உனது பக்தியையும் நம்பிக்கையையும் ஆதாரமாக வைத்து உன் குடும்பத்தவர் அனைவரையும் நான் பாதுகாப்பேன், என்பது பாபாவின் சத்ய வாக்கு. என் மனைவியின் குடும்பத்தில் இருந்த ஓர் நெடுநாள் பிரச்சனைக்கு அவர் பாபாவிடம் வேண்ட மிகப்பெரிய அற்புதமாக சாய் அதை தீர்த்து வைத்து அவரது பக்திக்கும் வித்திட்டு ஓர் மகிழ்வான சூழ்நிலையை உருவாக்கினார்.

அதுமுதல் ஒவ்வொரு வியாழனன்றும் வீட்டிலேயே அன்னபிரசாதம் தயார் செய்து வாரம் 16,18 பொட்டலங்கள் கட்டி பைக்கில் தேடிச் சென்று ஏழை எளியோர்க்கு அளிப்பதை வழக்கமாக செய்யத் தொடங்கினோம். அதில் ஓர் மனநிம்மதியும், சந்தோஷமும் குடும்பத்தையே ஆட்கொண்டு சொந்த பந்தங்களை திருப்பிப் பார்க்க வைத்தது.

இதற்கு பின் என் மைத்துனியின் பெண் B.Tech. முடித்து வேலை தேட கடும் முயற்சி செய்து ஹைதராபாத் வந்து நாங்களும் முயன்று ஒரு வழியும் புலப்படவில்லை. கடைமுடிவாக அந்த பெண்ணிடம் "எனக்குத் தெரியவில்லை என்றாலும், முற்றும் உணர்ந்த எனது ஷீரடி

சாய்நாதர் உனக்கு நிச்சயம் வழிகாட்டுவார். நீ என்னுடன் ஷீரடி வருகிறாயா?" என்றேன். உடனே அவரும் வருகிறேன் என்று பதிலளிக்க நாங்கள் இருவரும் வேலை வாய்ப்பை நாடி ஷீரடி சென்றோம்.

நாங்களும் ஷீரடி சென்று திரும்பிய சில நாட்களிலேயே அவருக்கும் "இன்ஃபோசிஸ்" கம்பெனியில் வேலை கிடைத்து எங்கள் மனங்களில் சந்தோஷமான திருப்பத்தை வழங்கி நம் சாய்ராம் ஆசிர்வதித்தார். மேலும் நம்பிக்கை தீவிரமாக, அவர் குடும்பத்தையும் சாய் ஆட்கொண்டு அவரது தாய், தந்தை, சகோதரன் மட்டுமின்றி அவர் மனம் முடித்த கணவரையும் பாபா ஆட்கொண்டு மிகுந்த மனவளத்துடன் அமெரிக்காவில் குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறார்.

எல்லா அற்புதங்களையும் சாய்பகவான் புரிந்துவிட்டு, நமக்கோர் பெரிய நற்பெயரை குடும்பத்தில் ஏற்படுத்தி மகிழும் எனது அருமை சாய்நாதரின் அன்பை யாரால் அளக்கமுடியும்? அவரது தம்பிக்கும் கேட்ட "கோர்ஸ்" நல்ல வேலை, திருமணம் அதே "கலிபோர்னியாவில்" அருகே வேலை என பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. ஒன்றா, இரண்டா? எடுத்துச் சொல்ல. ஹைதராபாத்தில் வசித்த போது, ஓர் இரவு பஸ் பயணத்தில் ஷீரடி செல்வதை வழக்கமாக கொண்ட எமக்கு ஏற்பட்ட அனுபவத்தில் ஒன்று இங்கே – உங்களுடன்.

அன்று மாலை 5.30 மணிக்கு ஷீரடி பஸ்ஸில் முன்பதிவு செய்து, பெட்டியில் துணியெல்லாம் எடுத்து வைத்து, மதிய உணவு முடித்து சிறிது ஓய்வெடுத்து 4.30 மணிக்கு கிளம்ப உத்தேசம். மதிய உணவை முடித்து, தண்ணீர் குடிக்க டம்ளரை எடுக்கிறேன். என் கை விரல்கள் நடுங்க என்னால் ஒரு சிறிய டம்ளரை கூட தூக்க இயலவில்லை. அதிர்ந்து போனோம் அனைவரும். என்னால் எழுந்திருக்கவும் இயலாது உடல் முழுவதும் வலி, காய்ச்சல் வேறு, என் கண்களிலிருந்து நீர் அருவியாக வருகிறது.

பாபா என்ன இது சோதனை? மிகுந்த ஆர்வத்துடன் ஷீரடி பயணத்திற்கு தயாராகும் நிலையில் 3 மணி நேரம் மட்டுமே கால அவகாசம், பஸ் நிலையத்திற்கு செல்ல. உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. பாபாவின் உதியையும் உபயோகித்தாகி விட்டது. மனம், ஏமாற்றம் அடங்கி, தெளிவான சிந்தனையில் நமக்கு வரவேண்டிய சவால் உடல்நலக் குறைபாடு, வீட்டிலிருக்கும் பொழுதே வந்துவிட்டபடியால் தப்பித்தோம்.

நாம் எப்பொழுது ஷீரடி வர வேண்டும் என்பது சாயி விருப்பம். ஆனால் இந்த "சிக்கன்குனியா தாக்குதல்" பேருந்து பயணத்தின் போது ஏற்பட்டிருந்தால் நம் உடலை நகர்த்த 2–3 பேராவது வேண்டுமே? இறங்கவும் முடியாது, ஏறவும் முடியாது எங்கே போவது? இந்த ஆபத்திலிருந்து நம்மைக்

காத்து அதே வேளையில் நாம் அனுபவித்து கழிக்க வேண்டிய வேதனையையும் நாம் இல்லத்தில் இருக்கும் பொழுதே தொடங்கி வைத்தது "எத்தகைய ஓர் அதிர்ஷ்டம் நமக்கு!"

உடனே மனதளவில் பாபா விற்கு நன்றி தெரிவித்து நான் இதை முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன் பாபா. நீங்கள் மறுபடி அழைக்கும் பொழுது வந்து தரிசனம் செய்கிறேன். "மிக்க நன்றி தேவா" என் தலையை பாபாவின் பாதங்களில் வைத்து வணங்குவது போன்று பாவித்து மனதால் சரணம் செய்தேன். இன்றைய காலத்தில் "கொரோனா" ஆனால் சுமார் 16–17 வருடங்களுக்கு முன்னால் சிக்குன்குனியா படுத்திய பாடு நம்மில் அனுபவத்தில் பலருக்கும் தெரிந்திருக்கும்.

சுமார் ஒரு வார ஓய்விலேயே பெரிய முன்னேற்றம் அடைந்து வலி, வேதனை குறைந்து உடல் நலமடைந்தேன். ஆனாலும் உடல் தெம்புடன் தனியே பயணம் செய்ய மீண்டும் ஒரு வாரம் தேவைப்பட்டது. இது நமது சாய்பாபாவிடம் முழு நம்பிக்கை யுடன் அவர் நம் வாழ்வில் துணையாக வரும்பொழுது ஏற்படும் இன்னல்களையும் நாம் ஏற்று முன்னேற வேண்டுமென்ற வாழ்க்கைப் பாடம், சாய் நம் வாழ்வில் – எல்லாம் நன்மைக்கே! என உணர வைத்த தருணம்.

குரு வாழ்க! சற்குருவே துணை.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

தொடர் - 45

அதிதேவதை

ஒரு பக்தர் பாபாவிற்கு பரிசாக ஒரு குதிரையை வழங்க விருப்பம் கொண்டார். ஆயியின் எண்ணம் பாபாவால் பூர்த்தி செய்யப்பட்டது. இதை அறிந்த ஆயி, ஓர் ஆளை அனுப்பி குதிரையை அழைத்து வர முடிவு செய்தாள். அந்த ஆளும் குதிரையை ஷீரடிக்கு இழுத்து வந்தான். அவன் ஒரு ஏழை ஆதலால், மனதில் பணத்தின் மீது கவனம் இருந்தது. பணம் எவரிடம் கேட்பது என அறியாமல் பாபாவின் மிக நெருங்கிய குழந்தையான சியாமாவிடம் போய் பணம் கேட்டான்.

சியாமாவோ இராதாகிருஷ்ண மாயிடம் சென்று பணம் பெற்றுக் கொள் என்றார். ஆயியிடம் வந்தான் ஆயியோ என்னிடம் ஏது பணம் நீ பாபாவிடம் பெற்றுக் கொள் என்றாள். அந்த ஏழையின் வாழ்வில் ஒரு திருப்புமுனை உண்டாக போவதை ஆயி அறிந்து கொண்டே பாபாவிடம் போ என கூறினாள். அவன் என்னதான் செய்வான் குழம்பிப் போய் கோபம் கொண்டு கத்தி கொண்டே பாபா பாபா என்று கூறி மசூதிக்கு சென்றான்.

பாபா மதிய வேலைதனில் ஓய்வில் இருந்த சமயம் அது. அவனோ கோபம் கொண்டு



திரைச்சீலையை தள்ளிவிட்டு உள்ளே சென்றான் அவ்வளவு தான். "ஆ" – என்ற அலறல் கேட்டது மசூதியில். தீட்சித் அதே சமயம் மசூதிக்கு வந்து பார்த்தார். பாபா கோபம் கொண்டவனின் மண்டையை உடைத்து விட்டார்.

அந்த ஏழை இரத்தம் சொட்ட சொட்ட வெளியே ஓடி வந்தான். தீட்சித்துக்கு என்ன செய்வதென புரியவில்லை. பிறகு தீட்சித் அவனுக்கு முதலுதவி செய்து விட்டு அவனது ஏழ்மை நிலையையும் அறிந்தார். தீட்சித் நல்ல மனிதர் ஆகையால் அடிபட்ட அந்த

ஏழைக்கு உதவிட முன்வந்து அவனிடம் கூறினார். நான் உனக்கு ஒரு குதிரை வண்டியை சொந்தமாக வாங்கி தருகிறேன். அவ்வண்டியை கொண்டு பாபாவின் அடியார்களுக்கு உதவி செய்து சம்பாதித்துக் கொள் என புரியும்படி கூறினார். பிறகு என்ன? ஏதுமற்ற ஏழைக்கு பாபா தன் லீலையால் ஒரு வண்டியை சொந்தமாக்கி கொள்ள அருள்புரிந்தார்.

ஆயி பாபாவின் லீலையை சரியாக முன்கூட்டியே அறிந்து தான் பாபாவின் விளையாட்டில் பங்கு கொண்டாள். எப்பேர் பட்ட கருணை இது! நம் இராதாகிருஷ்ணமாயியோடு பாபாவின் நெருங்கிய பக்தைகள் நட்புடன் உறவாடினர். முன்பு ஆயியை வெறுத்தவர்கள் பின்பு ஏற்றுக்கொண்டு மரியாதை செய்து குருசேவையில் ஈடுபட்டனர். அதேபோல் ஸ்ரீ காசிபாய் ஹன்ஸ்ராஜ் அவர்களும் ஆயியோடு இணைந்து பாபாவிற்கு நல்லவிதமாக குரு சேவைகளில் ஈடுபட்டார்கள்.

கோவிந்தசாமி அலியாஸ்பாவ் சுவாமி என்பார் சென்னையை சேர்ந்தவர். இவர் மின்சாரம் சம்பந்தமான பணியை செய்தவர். இவரும் சிலரும் யாத்திரைக்கு புறப்பட்டு புண்ணியஸ்தலங்களை தரிசித்தனர். அப்போது பாபாவை பற்றி கேள்விப்பட்டு ஷீரடிக்கு 23.8.1915 ல் வந்தனர். பாபாவை மனதார தரிசித்து ஆனந்தப்பட்டனர். பாபா அவரை சிலநாள் ஷீரடியில் வசிக்கும் படி ஆணையிட்டார்.

கோவிந்தசாமி என்பவர் பாபாவின் முன்பு நல்ல பஜனைப் பாடல்களை பாடுவார். அவருக்கு பாபாவின் அடியார்கள் பல உதவிகளை புரிந்தனர். வாடாவில் தங்க வைத்தனர். இந்நிலையில் டாக்டர் பிள்ளை கோவிந்தசாமிக்கு மிக நெருங்கிய நண்பர் ஆனார். மேலும் இராதாகிருஷ்ண மாயியின் புனித சேவைகளைக் கண்டு ஆயி நடத்தும் சத்சங்கத்திலும் கலந்துக் கொண்டு ஆயிக்கும் மரியாதை தந்தார்.

03.09.1915 அன்று அதிகாலை கோவிந்தசாமி கனவு ஒன்றைக் கண்டார். அக்கனவைப் பற்றி டாக்டர் பிள்ளையிடம் கூறினார். அன்றைய தினம் கனவு கண்டவர் என்ன நினைத்தாரோ அறியவில்லை பாபாவின் முன் அமர்ந்து மனம் உருக பஜனை செய்தார்.

அதேபோல் பிருந்தாவனத்தில் இராதாகிருஷ்ணமாயியின் முன்பும் பஜனை செய்தார். அப்போது நம் ஆயி கோவிந்தசாமி அவர்களுக்கு பாபாவின் லீலைகள் அடங்கிய மராட்டி புத்தகத்தை பரிசாக தந்தாள். ஆயியிடம் விடைபெற்ற கோவிந்தசாமி பாபாவிடம் சென்றார். பாபாவோ தன் ஆசியைத் தந்து உதிபிரசாதமும் 2 ரூபாய் தந்தார். பின் பாபாவிடம், ஆயியிடமும், அடியார்களிடமும் விடைபெற்று ஊருக்கு திரும்பினார்.

நாசிக் மாவட்டம் சின்னர் என்ற ஊரைச் சேர்ந்தவர் கண் பார்வையற்ற ஒருவர் இருந்தார்.

தாயின் உதவியின்றி அவரால் எதையும் செய்ய இயலாது. அவருடைய கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டே இருக்கும். ஷீரடிக்கு வந்து பாபாவை தரிசிக்கும் பாக்யம் அவருக்குக் கிடைத்தது. கண் தெரியாதவரை பார்த்த பாபா "அல்லா நல்லதையே செய்வார் என கூறி உதியை தந்தார்". அப்போதிலிருந்து ஒவ்வொரு வியாழக்கிழமையும் பாபாவை காண ஷீரடிக்கு வருவார்.

சின்னர் ஊர் கிராமவாசிகள் அவரை வற்புறுத்தி பம்பாயில் உள்ள ஜே.ஜே. மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கே மருத்துவரோ கண்பார்வை கிடைக்க சாத்தியமில்லை என கூறிவிட்டார். தாயானவள் மிகவும் வருத்தப்பட்டு மகனை அழைத்துக் கொண்டு தன் ஊருக்கே சென்றனர். ஊருக்கு சென்றபின் கிராமவாசிகள் என்னவாயிற்று மகனுக்கு பார்வை கிட்டுமா இல்லையா என கேட்டதற்கு மனம் நொந்து பதில் தந்தாள் தாய். பிறகு தாய் மகனை அழைத்துக் கொண்டு ஷீரடிக்குச் சென்றனர். அங்கேயே தங்கவும் முடிவு செய்தனர். ஒரு நாள் அந்த தாய் தன் மகனை தனியே விட்டு விட்டு தன் ஊருக்குச் சென்று விட்டாள்.

குருட்டுதன்மையிலிருந்து மகனை இனி எவர் கவனித்து கொள்வர்.பரம பிதாவாகிய சாயிநாதரே ஏற்றுக் கொண்டார். நம் இராதாகிருஷ்ணமாயி ஒரு தாயாக இருந்து கண் தெரியாதவனை பாபாவின் சேவையில் ஈடுபட வைத்தாள். மேலும் ஆயி கூறினாள் "உன் குருட்டுதன்மை உன்னை விட்டு நீங்க வேண்டுமாயின் நீ தினமும் பாபா தன் முகத்தை அலம்புவார். அந்த புனித நீரை கொண்டு நீ உன் முகத்தை கழுவி வா" என குறிப்பைத் தந்தாள்.

அன்றிலிருந்து தினமும் பாபா முகத்தை அலம்பும் நீரை பிடித்து தன் முகத்தை கழுவி வந்தான். ஒரு மாதம் கழித்து அவனது கண்களில் சிறு மாற்றம் உண்டாகி மங்கலாக பார்வை தெரிய ஆரம்பித்தது. பின் பாபாவை காண சாவடிக்குச் சென்றான். பாபா அவனது மார்பை கையால் தட்டினார் அடுத்த நொடி கண் பார்வை முற்றிலும் சரியாகி ஆனந்தக் கண்ணீர் விட்டான்.

பிறகு பாபாவின் அருளால் பார்வை கிட்டிய பின் ஆயிக்கு தன் மனதார நன்றியை தெரிவித்தான். ஆயி பாபாவிற்கான சேவைகளை நன்கு செய்யும்படி உத்தரவிடுவாள். ஆயி தரும் எல்லா சேவைகளையும் அன்போடு செய்து வந்தான். கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவான். அன்றிலிருந்து பாபா மஹாசமாதி அடையும் வரை ஷீரடியிலேயே சாயியின் சேவைதனில் தன் வாழ்வைக் கழித்தான்.

ஆயியின் பிருந்தாவனத்தில் பாபாவின் நெருங்கிய அடியவர்கள் பஜனை மற்றும் சத்சங்கம் செய்வர். ஆயி கீதகோவிந்தமான அஷ்டபதியை பாடிப் பாடி மகிழ்வாள். டாக்டர் பிள்ளையும் ஆயியுடன் இணைந்து அஷ்டபதிக்கு விதவிதமாக



இன்னிசையை வாசிப்பார். ஆயி பலமுறை கிருஷ்ண பக்தியில் மூழ்கி சமாதி நிலையை எட்டுவதை டாக்டர்.பிள்ளை போன்ற அடியவர்கள் கண்டு உள்ளனர். ஆயியின் பக்தியைக் கண்டு உள்ளம் உருகிபோய் தங்களுக்கும் அத்தகைய பிரேமை பக்தியை பாபா தந்தருளும்படி வேண்டுவார்கள்.

இதுபோன்ற இராதாகிருஷ்ண மாயியை பற்றி பற்பல நிகழ்வுகள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கிறது. பாபாவின் அருளால் அவை எல்லா வற்றையும் ஒன்று திரட்டி பார்த் தால் தான் தெரிகிறது ஆயியின் பிரேமையும், குரு பக்தியும் எவ்வ ளவு மகத்துவம் வாய்ந்தது என்று.

அன்று இராதாகிருஷ்ணமா யியால் செய்யப்பட்ட இத்தகைய விலைமதிக்க முடியாத, காலத்தால் அழியாத குருசேவைக்கு கிடைத்த பலன் யாதெனில், ஆயி ஷீரடியில் வாழ்ந்ததற்கான அடையாளமே இல்லாது மண்ணோடு மண்ணாகி விட்டது. ஆயி வாழ்ந்த இடமோ ஆயியின் புண்ணிய மஹாத்மாவின் உருவமோ எங்கும் காணப் படவில்லை.

ஆயினும் ஆயி விதைத்த குருபக்திக்கும், பிரேம பக்திக்கும், பாவபக்திக்கும் பூர்ணமாக சக்தி இருப்பதால் தான் இன்று பாபாவின் அருளாலும், ஆயியின் அருளாலும் இக்காவியம் சரியான தருணத்தில் கிடைத்து இருக்கிறது. இது பாபாவின் கருணையே!

நிறைவு பெற்றது



சர்க்கரை நோயை குறைக்கும் பூசணி விதைகள்

பூசணி விதை சாப்பிட்டால் எடையும் குறையும். சர்க்கரையும் குறையும்.

பூசணி விதையில் ஏராமான வைட்டமின்களும் ஊட்டச்சத்துக்களும் இருக்கின்றது. குறிப்பாக, ஆண்களுக்கு விந்து கெட்டிப்பட, ஆண்மை சக்தியை அதிகரிக்கப் பயன்படும் ஒரு அற்புதப் பொருளாக இருக்கிறது. பூசணிக்காயில் மக்னீசியம் காப்பர் புரோட்டின் மற்றும் ஏராளமான சத்துக்கள் உள்ளது. இவை உடலுக்கு சக்தி தரக்கூடிய உணவு ஆகும்.

பூசணிக்காய் விதைகளில் உள்ள நல்ல விஷயங்கள் நமது உடலில் உள்ள பெரும் பகுதிக்கு உதவியாக அமைகிறது. சிறுநீரக பகுதி, இதயம் சம்பந்தப்பட்ட உறுப்புகள், மற்றும் ஒருசில புற்றுநோய் போன்ற விஷயங்களிலிருந்து நம்மைக் காக்கிறது. இந்த விதைகளை சுலபமாக நமது உணவில் கலந்து சாப்பிட முடியும்.

பூசணிக்காய் விதைகள் சிறியதாக இருந்தாலும் அதன் பலன்கள் மிகவும் பெரியது. முழுக்க முழுக்க ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது பூசணிக்காய் விதையை நாம் கொஞ்சமாக எடுத்துக் கொண்டாலும் அதன் ஆற்றல் அதிகம். அதில் நல்ல கொழுப்பு மெக்னீசியம் மற்றும் புரோட்டின் உள்ளன. இதனாலேயே பூசணிக் காயின் விதைகள் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

உங்கள் மனதில் நீங்கள் ஆரோக்கியத்திலும் அதிக ஆயுள் காலம் நோய்நொடி இல்லாமல் வாழ வேண்டும் என்று நினைத்திருந்தால், முக்கியமாக, சந்தையில் கிடைக்கும் நொறுக்குத்தீனி உணவுகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

அதற்குப் பதிலாகச் சத்து நிறைந்த மினரல்கள், நார்சத்து நிறைந்த உணவை உங்கள் உணவில் சேர்க்க வேண்டும்.

அந்தவரிசையில் பூசணிக்காயின் விதைகள் என்பது ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. பூசணிக்காய் விதைகளில் மெக்னீசியம் நிறைந்து இருப்பதால் எலும்புகள் அடர்த்தியாகவும் உறுதியாகவும் இருப்பதற்கு உதவுகிறது. எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது.

பூசணிக்காய் விதைகள் உடலிலுள்ள சர்க்கரையின் அளவை சீராக்கி நீரிழிவு நோயிலிருந்து நம்மைக் காக்க உதவுகிறது. வெளிநாடுகளில் நடந்த ஒரு ஆய்வின் படி அதிக சர்க்கரை இருந்த எலிகளுக்கு பூசணிக்காயின் விதைகள் அளிக்கப்பட்டது ஆய்வின் முடிவில் சர்க்கரை யின் அளவு குறைந்து எலிகள் ஆரோக்கியமானது கண்டுபிடிக்கப் பட்டது.

பூசணிக்காய் விதைகளில் உள்ள ஆன்டி–ஆக்ஸிடன்ட், மெக்னீசியம் மற்றும் ஃபேட்டி ஆசிட்டுகள் இதயத் துடிப்பிற்கு மிகவும் நன்மை விளைவிக்க கூடியது. மேலும் இதில் மோனோசாச்சுரேட்டட் ஃபேட்டி ஆசிட் இருப்பதால் இது நம் ரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரால் அளவை குறைக்கிறது. மேலும் நல்ல கொலஸ்ட்ராலை அதிகப் படுத்துகிறது. இது இதயம் ஆரோக்கியமாக இயங்க பெருமள வில் உதவி செய்கிறது.

பூசணிக்காய் விதைகளை நம் உணவில் கலந்து சாப்பிடும் பொழுது, நமது பசியின்மையைக் குறைத்து வயிறு நிறைந்தது போல் ஒரு உணர்வை உண்டுபண்ணுகிறது. எனவே தேவை இல்லாத நேரங் களில் உணவு அருந்துவதை நாம் தவிர்க்கிறோம். இதனால் உடல் எடை குறைப்பதற்குப் பெரிதும் உதவி செய்கிறது. மேலும் செரிமான கோளாறுகளையும் சரி செய்கிறது.



சிலருக்குச் சரியான நேரத்தில் தூங்குவது என்பது பெரும்பாடாக இருக்கும். மெக்னீசியத்தின் உள்ள டிரைடோபன் என்னும் வேதிப்பொருள் நல்ல தூக்கத்தை வரவழைக்கிறது. மேலும் பூசணிக் காய் விதைகளில் மெக்னீசியம் உள்ளதால் அது இன்சோம்னியா போன்ற தூக்கமின்மை வியாதி யிலிருந்து நம்மை விடுவிக்கிறது.

பூசணிக்காய் விதைகளில் உள்ள சக்தி வாய்ந்த

ஆன்டி–ஆக்ஸிடன்ட்களான விட்டமின் ஏ, நமது செல்களில் உள்ள தீங்கு விளைவிக்கக்கூடிய வேதிப் பொருட்களை நீக்கி நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. தினமும் நாம் பூசணிக்காய் விதைகளை உண்டு வந்தால் அடிக்கடி வரும் ஜலதோஷம் மற்றும் ஒரு சில காய்ச்சல்களில் இருந்தும் கூட நாம் தப்பிக்கும் வாய்ப்புகள் அதிகம்.

மேலும் பூசணி விதைகளில் உள்ள ஒரு வகையான அமினோ ஆசிட் என்பவை முடி வளர பெரிதும் உதவுகின்றது. மேலும் அதிலுள்ள மற்றொரு காரணம் அது முடி அடர்த்தியாகவும் பளபளவென்று அழகாகவும் வளர பூசணிக்காய் விதைகள் காரணமாக அமைகிறது. பூசணிக்காய் விதையை எண்ணெய்யாகத் தயாரித்து சில இடங்களில் விற்பனை செய்கிறார்கள் அதை நமது முடியில் தேய்த்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

பூசணிக்காய் விதைகளைப் பல வழிகளில் சாப்பிடலாம் பச்சையாகவும் சாப்பிடலாம் அல்லது வறுத்தும் சாப்பிடலாம் அல்லது சூப், சாலட், போன்ற உணவுப் பொருட்களிலும் கலந்தும் சாப்பிடலாம். ஆனால் தினமும் நமது உணவுப் பட்டியலில் பூசணிக்காய் விதை இருந்தால் நமக்குச் சிறப்பான பலன்கள் கிடைக்கும் என்பது உறுதி!

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

இறைச்சிந்தனை

இரவு பகலாக தேஹாபிமானத்திலும் புலனின்பங்களிலும் மூழ்கிப் போகின்றவர்களுக்கு குருவின் உபதேசம் வீணாகிப் போகிறது. அவர் உலக வாழ்விலும் தோற்றுப் போகிறார். ஆன்மீக வாழ்விலும் தோற்றுப் போகிறார்.

இதயத்தை தூய்மை செய்து கொள்ளாமல் ஆன்மீக வாழ்வில் நுழைபவர் தம்முடைய ஞான கர்வத்துடன் ஊர்வலம் வருகிறார். உண்மையில் அது பலனேதும் தராத முயற்சி "ஆகவே, எது தேவையோ அதைப் பேசுங்கள். எவ்வளவு ஜீரணிக்க முடியுமோ அவ்வளவே சாப்பிடுங்கள்"


இல்லையெனில், அஜீரணம் ஏற்படும். இது அனைவரும் அறிந்ததே! "என்னுடைய கஜானா நிரம்பி



யிருக்கிறது. யார் வந்தாலும் எதை வேண்டினாலும் கொடுக்கிறேன். ஆனால், வாங்கிக் கொள்பவருடைய தகுதியை நிர்ணயித்து அவரால் சமாளிக்க முடிந்த அளவே கொடுப்பேன். என்ற பகவான் சாயிநாதரின் வார்த்தையை அடிக்கடி நினைவில் கொள்ளுங்கள்.

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் நாம் இந்த மாதம் "செங்கல் தாத்தா" என்று அன்போடு அழைக்கும் அருட்திரு "வேங்கட அப்பானந்தா" சுவாமிகள் சீவ சமாதியை தரிசனம் செய்து அவரின் வரலாற்று குறிப்புகளை அறிந்து கொள்வோம்.



– அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

வேங்கட அப்பானந்தா

ஆன்மீக பூமியாம் சென்னை மாநகரில் எத்தனையோ சித்தர்கள் சீவ சமாதி அடைந்துள்ளனர். அதில் சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் சீவ சமாதி அடைந்துள்ள அருட்திரு வேங்கட அப்பானந்தா சாமிகளும் ஒருவர்.

ஆந்திர மாநிலத்தை பூர்வீகமாகக் கொண்டவர். ஆன்மீக ஈடுபாடு காரணமாக சென்னை வந்து சேர்ந்தார். இவர் வியாசர்பாடியில் சாமியார் தோட்டம் பகுதியில் சீவ சமாதி அடைந்த ஸ்ரீ கரபாத்திர சாமிகள் பரம்பரையில் வந்தவர்.

நமது வேங்கட அப்பானந்தா சாமிகளின் ஆன்மீக ஆத்ம குருவாக சென்னை ஓட்டேரி குயப்பேட்டை (கொசப்பேட்டை) பகுதியில் சீவ சமாதி ஆலயம் கொண்டுள்ள ஈசூர் சச்சிதானந்த சாமிகள் விளங்கினார்.

குருவின் ஆசியில் தவத்தின் பயனாலும் அட்டமா சித்துக்களைப் பெற்று சித்தநிலையை அடைந்தார். ஒரு முறை மழை பெய்து கொண்டிருந்தது. அப்போது சாமிகள் மீது



மழை நீர் படாமல் இருந்தது. இதனைக் கண்ட ஊர் மக்கள் சாமிகளின் ஆற்றலையும், மகிமையையும் அறிந்து கொண்டனர். அதன் பின்பு இவருடைய புகழ் ஊர் எங்கும் பரவி பொதுமக்கள், தொழில் அதிபர்கள் அரசு அதிகாரிகள் என அனைவரும் வந்து சாமிகளை வணங்கி சென்றனர்.

மழை பெய்யும் போது சித்தர்களின் சக்தியால் மழைநீர் இவர்களது உடல் மீது படாது உதாரணமாக ஸ்ரீபெரும்புதூர் வடபழனி பரஞ்சோதியார், ஸ்ரீபெரும்புதூர்

அருள்வெளி பாபா போன்றோர் மீது மழைநீர் விழாது இதுதான் சித்தர்களின் சக்தி மகிமை.

அருட்திரு வேங்கட அப்பானந்தா சாமிகளின் உடல் மீது அதிர்வலைகள் நிரம்பி இருக்கும். வாழும் காலத்தில் அவர் அருகே சென்றால் காந்தம் போன்று இழுப்பதை உணர்ந்தனர். தம்முடைய சித்த சக்தியால் மக்களின் துயரத்தைப் போக்கினார். சுவாமிகள் தன்னை நாடி வந்த அன்பர்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் அன்னதானம் அளித்து வந்தார். ஞானத்தை தேடி வரும் மக்களுக்கு நல்ஞானம் அளித்தார்.

பழைய வண்ணாரப்பேட்டை பகுதியில் அமர்ந்து இருக்கும் போது அப்பகுதியில் சூளையிலிருந்து வண்டியில் வரும் செங்கற்களை தன் திருக்கரங்களால் தொட்டு ஆசிர்வதித்து அனுப்பி வைப்பார். அப்படி செல்லும் வண்டிகளில் உள்ள செங்கற்கள் உடனே விற்று தீர்ந்து விடுமாம். அதனாலேயே சாமிகளை அப்பகுதி மக்கள் அன்போடு செங்கல் தாத்தா என்று அழைத்து வந்துள்ளனர்.

வாசியோகம் செய்த சித்தர், கூடு விட்டு கூடு பாயும் கலையை நற்காரியங் களுக்காக செய்தவர். கிணற்றுக்குள் ஜல சீவ சமாதி அடைந்த மகான். தான் வாழ்ந்த பகுதி மக்களுக்கு மருத்துவம், கல்வி கிடைக்க பெரிதும் உதவி செய்தவர்.

ஒரு முறை சாமிகள் தங்கியிருந்த



பழைய வண்ணாரப்பேட்டை பகுதியில் மழை இல்லாமல் விவசாயம் பாதிப்படைந்தது. மக்களின் வேண்டுகோளின் படி அப்பகுதியில் தன் தவ வலிமையால் மழையை வரவழைத்தார். ஒரு வாரம் மழை பெய்தது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். விவசாயம் செழித்தது. ஊர் மக்கள் ஒன்று கூடி சாமிகளுக்கு நன்றி கூறினர்.

நமது சித்தர் ஸ்ரீமத் வேங்கட அப்பானந்தா சுவாமிகள் 18.10.1896 ஐப்பசி பூரட்டாதி ஞாயிற்றுக்கிழமை அன்று கிணற்றுக்குள் ஜல சீவ சமாதி அடைந்தார். இந்நிகழ்வை அவருடைய ஆத்ம சீடர் ஸ்ரீலஸ்ரீ முனுசாமி சாமிகள் செய்தார். வியாழக்கிழமை தோறும் குருபூஜை நடைபெறும் ஆற்றல் மிக்க ஆலயம்.

சித்தர் பீடத்தில் 7 விளக்குகள் ஏற்றி அன்னதானம் செய் தால் வேண்டிய வரத்தைக் கொடுக்கும் அற்புதமான சித்தர். கோர்ட்டில் வழக்கு கள் இருந்தால், அவ்வழக்கின் கேஸ்கட்டை இப்பீடத் தில் வைத்து வழிபட்டு எடுத்துச் சென்றால், நல்வழக்காக இருந் தால் நிச்சயம் சுப முடிவு வருவதாக சித்தர் பீடத்தை வழிபடும் பக்தர் களின் நம்பிக்கை.

சித்தர் பீடத்தில் தினமும் அன்னதானம் பக்தர்களின் பங்களிப்போடு சிறப்பாக நடை பெறுகிறது என்பது குறிப்பிடத் தக்கது. பூஜையின் போது பைரவர் (நாய்) வந்து வழிபடும் அற்புதமான சித்தர் பீடம்.

சித்தர் பீடத்தில் சுவாமிகளின் சீடர்களின் சமாதி பீடங்களும் அடுத்தடுத்து அமைந்துள்ளன. சித்தர் பீடத்தில் எங்கு திரும்பி னாலும் அழகான ஓவியங்கள் கண்ணுக்கு அழகாக காட்சி தருகிறது. அதிலும் நம் சித்தரின் ஓவியம் மிகச்சிறப்பாக உள்ளது.



சித்தர்களின் சீவ சமாதிகளை வழிபட்டால் நமது கர்ம வினையின் வீரியம் குறையும் என்பது உண்மை. சித்தர்களை வணங்குவோம்! சித்தர் களின் சீவ சமாதி ஆலயங்களை வழிபடுவோம்!

சித்தர் பீட ஆலய முகவரி:

அருட்திரு ஸ்ரீமத் வேங்கட அப்பானந்தா சுவாமிகள் சீவ பீட ஆலயம், எண்: 31, கோதண்ட ராமன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 21

பேருந்து வசதி:

சென்னை கோயம்பேடு – திருவொற்றியூர், சென்னை கிளாம்பாக்கம் – திருவொற்றியூர், சென்னை பாரிமுனை – திருவொற்றியூர், **இறங்கும் இடம்:** மகாராணி தியேட்டர் பஸ் ஸ்டாப்.

மின்சார இரயில் வசதி:

தாம்பரம் – சென்னை கடற்கரை, திருவள்ளூர் – சென்னை கடற்கரை, **இறங்கும் இடம்:** சென்னை கடற்கரை

கும்மிடிப்பூண்டி – சென்னை சென்ட்ரல், **இறங்கும் இடம்:** வண்ணாரப்பேட்டை

ஆட்டோ வசதி:

சென்னை கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து உள்ளது. சென்னை தங்க சாலை (மிண்ட்) பேருந்து நிலையத்திலிருந்து உள்ளது.



ஆத்மஞானம்

ஆத்ம ஞானத்தை அறிய வேண்டும் என்கிற எண்ணம் வருவதற்கே நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஏனெனில் அந்த எண்ணம் ஆயிரத்தில் ஒருவருக்கு தான் உருவாகும் என்பது முன்னோர் வாக்கு. அத்தகையோரில் ஆயிரத்தில் ஒருவருக்குத் தான் ஆத்ம ஞானம் புரியுமாம். அவ்வாறு புரிந்தவர்களில் ஆயிரத்தில் ஒருவருக்கு தான் ஆத்ம ஞானம் நிலைக்குமாம். அவனே ஆத்ம ஞானி.

அந்த கணக்குப்படி பார்த்தால், 100 கோடி மக்களில் ஒருவனே ஆத்ம ஞானம் அடைவான் என்கிறார்கள் முன்னோர்கள். ஏனெனில் ஆத்ம ஞானம் அடைவது என்பது அத்தனை சுலபம் அல்ல என்பதை இது வலியுறுத்துகிறது. இருப்பினும் மிகவும் சிரமப்பட்டு யாம் பெற்ற இந்த ஞானத்தை அனைவரும் பெற வேண்டும் என்பதே நமது குரு யோகி ஸ்ரீராம் பாபாவின் நோக்கமாகும்.

விலங்குபோல அறியாமையில் வாழ்ந்து கொண்டு இருக்கும் பலகோடி மனிதர்களுக்கு மத்தியில் நாமும் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். எனவே, தகுதியுள்ள குருவை நாடி ஞானத்தை பெற்று, நாம் நமது அறியாமையை இலகுவாக விளக்கிக் கொண்டு கவலைகளிலிருந்து விடுபட வேண்டும்.

கோபம், பயம், வெறுப்பு, கவலை போன்றவை யாவும் சுய தண்டனைகளைத் தரும் உணர்வுகளே! இத்தகைய உணர்வுகளை அடையாளம் கண்டுபிடித்து அவற்றிலிருந்து விலகி நிலையான இன்பத்துடன் வாழ்வதற்கே மனிதன் என்கிற ஒற்றைப் பிறவிக்கு மட்டும் மனம் கொடுக்கப் பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மிக மேன்மையான நற்காரியத் திற்காக மனதை பழக்கப்படுத்தி மனதை நெருங்கிய நண்பனாக்கி நிரந்தர ஆனந்தத்தோடு வாழ்வ தற்காக மனம் கொடுக்கப்பட்டது. ஆனால் மனிதனோ மனதை அதன் போக்கில் செலுத்தி, மனதை தனக்கு மோசமான எதிரியாக மாற்றிக் கொண்டு, கவலைக் கடலில் மனிதன் தத்தளிக்கின்றான்.

அதாவது, நம் மனமே நமக்கு முதல் எதிரி என்கிற ஞானம் தான் நம் மனதில் நிலைக்க வேண்டும்! பக்கத்தில் இருக்கும், எதிரே இருக்கும், சிறு சிறு எதிரிகள் மீது தான் நாம் வெறுப்பை காட்டு கிறோம். ஆனால், அனைத்து எதிரிகளிலும் மோசமான எதிரியாகிய மனதை மட்டும் நாம் புரிந்து கொள்வதே இல்லை.

ஆத்மஞானத்தைப் பெற்று, மரணக் கவலையை போக்கி, மரண பயமின்றியும், சந்தோஷமாகவும் இறப்பதே இந்த மனிதப் பிறவியின் பிறவிப் பயனாகும். அதற்காகவே, நாம் மனிதர்களாக பூமிக்கு வந்துள்ளோம். அதற்காக, நாம், 1.மனநிறைவு, 2.மன அமைதி, 3. நிலையான ஆனந்தம் ஆகிய மூன்று அரிய புதையல்களை அடைய வேண்டும்.

அதற்கு ஆத்ம ஞானத்தைக் கற்றுக் கொள்வது தான் ஒரே தீர்வு! நான் யார் என்ற கேள்வியின் மூலம் ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே ஏன் அறிய வேண்டும் தெரியுமா? உலக மக்கள் அனுபவிக்கின்ற அத்தனை



வகையான கவலைகளுக்கும் ஒரே தீர்வு "நான் ஆத்மா" என்கிற இரு சொல் மந்திரமே! இதுவே ஆத்மாவைப் பற்றிய நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஞானம் ஆகும்.

உபநிஷத்துக்களில் கூறப்பட் டுள்ள இந்த ரகசியத்தால், அவன் அனுபவிக்கின்ற அத்தனை கவலைகளும் மறைகின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, மனிதன் "தான் ஒரு மனம்" என்ற தவறான அறிவை கொண்டிருக் கிறான். அதன் காரணமாக மனம் படுகின்ற அத்தனை கவலை களுக்கும் அவன் துன்பங்களை அனுபவிக்கின்றான்.

"நீ இந்த மனம் அல்ல' என்று உணர்வதன் மூலம், உன் மனதினுடைய தீய குணங்களில் இருந்து நீ விடுபடுகின்றாய்" "உன்னையே நீ அறிய முற்படும்

போது, மேன்மையான ஆத்மா வாக நீ இருக்கிறாய் என்பதை உணர் கின்றாய்!" அதன் விளைவாகவே, உன் மனமானது, மனநிறைவு, மன அமைதி மற்றும் நிலை யான மகிழ்ச்சி ஆகிய மூன்று அரிய பொக்கிஷங்களை பெறு கின்றன.

இந்த அறிய அற்புதக் கலையை நமது குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தன்னுடைய உயிர் மூச்சாகக்கொண்டு தன்னுடைய அடியவர்களுக்கு கடந்த பதினைந்து ஆண்டுகளாக போதித்து வருகின்றார்கள்.

சமீபத்தில் " மவுனத்தின் மூலம் தவம்" என்ற பத்து வார ஆத்ம ஞான வகுப்பினை (ஆன்லைன் வகுப்பாகவும், நேரிடையாகவும்) அறிமுகப்படுத்தி ஏராளமான ஆத்மஞானியினரை உருவாக்கி வருகின்றார்.


நான் யார் என்று உணர வேண்டு வோரும், உடல் நலம் மனவளம் வேண்டுவோரும் இவ் வறிய வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் ஆனந்தம், ஆரோக்கியம், அமைதி பெற அனைவரையும் அழைக்கின்றோம். மேலும் விபரங்களுக்கு;

திருமதி. மாதங்கி பாலாஜி
போன்: 9942219947

இறைவனுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்

ஒவ்வொரு நாளும் வேலையைத் தொடங்குமுன் சில நிமிடங்களாவது இறைவனை பிரார்த்தனை செய்யுங்கள். ஒவ்வொரு நாளின் முடிவிலும் வேலை முடிந்ததும், வழிபாட்டு அறை போன்ற ஒரு புனிதமான இடத்தில் ஒன்றுகூடி, இறைவனின் திருநாமத்தை கூறிப்பாடி அவரது மாண்பினைத் தியானம் செய்து இறைவனுக்கு உங்களது நன்றியை அர்ப்பணம் செய்யுங்கள்.

அது உங்களை உண்மையான கர்ம யோகிகளாக, கர்மவீரர்களாக மாற்றும். நீங்கள் வாழும் இடங்களும், நீங்கள் பணிபுரியும் இடமும் கைலாயம், வைகுண்டம் போன்று தெய்வங்கள் வசிக்கும் இடம் என்று



நம்புங்கள். அவர்களுடன் தான் நீங்கள் வாழ்கின்றீர்கள் என்பதே உண்மை.

இந்த சூழ்நிலையில் வசிக்கவும், வேலை செய்யவும் நான் அதிருஷ்டம் செய்திருக்க வேண்டும். இது ஒரு தபோவனம். இங்கே குடியிருக்க நான் மிகவும் விரும்புகின்றேன். என்ற அர்ப்பணிப்பே நமக்கு மகிழ்ச்சி, சந்தோஷம், அன்பு, சேவை, இறைத்தன்மை ஆகியவற்றை வாரி வழங்கும்.

SoundzGood
Music at its best...



TRUE TO OUR NAME EVERYTIME SOUNDS GOOD!!!

SPREADING HAPPINESS

- Live Instrumental
- Vocal and Instrumental
- Carnatic and all genres





BOOK NOW

9566167680 / 9003120624
WWW.SOUNDZGOOD.IN
46, Rajiv Gandhi salai OMR

ஒரு யோகியின் வாழ்க்கை எப்படி இருக்கும்? வாழ்க்கை அனுபவங்கள் எப்படி ஆத்மஞானமாக ஆகும்? ஸ்ரீராம் எப்படி யோகி ஸ்ரீராம் பாபா ஆனார்? ஒரு ஞானி எப்படி சிந்திப்பார், செயல்படுவார்? அதுதான் 'குருவைத் தேடி'. ஞானத்தை தேடுபவர்கள் கண்டிப்பாக படிக்க வேண்டிய நூல்.

– திருமதி. மாதங்கி பாலாஜி,
அவதூத கீதை, ஸ்ரீ பாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம், சாயி சமர்த்தர் நூல் ஆசிரியர்.

அற்புதமான நினைத்து பார்க்க முடியாத நிகழ்வுகள். அனுபவங்கள். எளிமை சுருக்கம் செறிவான விளக்கம். மிகவும் அருமையான ஒரு பொக்கிஷம். மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. அனைவரும் படிக்க வேண்டிய நூல்.


திரு.சந்தானம், நெய்வேலி. ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதம் ஆசிரியர்.

குருவைத்தேடி புத்தகம் படித்து முடித்தேன். என்ன ஒரு பாக்யம் உங்களுக்கு. ரொம்ப சந்தோஷம். உங்கள் புத்தகம் பலருக்கு ஆசீர்வாதம். அது மனித குலத்தின் நம்பிக்கை. என் கோப்பை காலியாக உள்ளது.தயவுசெய்து என்னை ஆசீர்வதியுங்கள்.

திருமதி. கீதா, மயிலாப்பூர்.

தங்கள் புத்தகத்தை மெதுவாகத்தான் படிக்கத் துவங்கினேன்.ஆனால் வைக்க மனமில்லாமல் ஒரே நாளில் முடித்து விட்டேன்.இதைப்படித்த நான் பாக்கியசாலி ஐயா.நெஞ்சைத் தொடும் வரிகள். என்ன ஒரு அனுபவம்.கண்கலங்கி அழுது விட்டேன். இந்த புத்தகத்தை இறுக பற்றிக் கொள்வேன்.


திருமதி. காமாட்சி, சேலம்.



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
தியான வகுப்புகள்:

யோகி ஸ்ரீராம் பாபாவின் நேரடி பயிற்சி

"மௌனத்தின் மூலம் தவம்"

10 வார வகுப்புகள்

9 வாரம் ஆன்லைன் வகுப்புகள். 10 வது வாரம்
"மௌனத்தின் மூலம் தவம்" ஒரு நாள் பயிற்சி நடைபெறும்
* பயிற்சியாளர்கள் கண்டிப்பாக நேரில் வந்து கலந்து கொள்ள வேண்டும் *

நேரம் – ஞாயிறு காலை 9–10.30 வரை.
(மாதத்தின் முதல் ஞாயிறு தவிர)
மௌன தினத்தன்று
குண்டலினி தீட்சை கொடுக்கப்படும்.
கட்டணம் ₹ 3000/-

- பிராணாயாமம்,
- யோகாசனங்கள்,
- கிரியா விளக்கங்கள்,
- தியானம்,
- ஆத்மஞானம்,
- குண்டலினி யோகம்.



கலியுகத்தில் அனைத்தும் சுலபமாகக் கிடைக்கும் என்பது பெரியோர்கள் வாக்கு.

குருவும் பயிற்சியும் உங்கள் உள்ளங் கையில் கிடைக்கிறது. தூரமாக இருக்கிறேனே என்று ஏங்க வேண்டாம். உங்களுக்காக ஆன்லைன் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

நேரிலும் வந்து பயிற்சி எடுத்துக் கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு;


திருமதி. மாதங்கி பாலாஜி,

போன்: **9942219947**

குரு வாழ்க! குருவே துணை! ஞான ஒளி திக்கெட்டும் பரவட்டும்!


STAR
Personal & Caring
Health Insurance
The Health Insurance Specialist
LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA
5 வருடங்கள்
மட்டும்
முதலீடு செய்து
வாழ்நாள் முழுவதும்
உறுதியளிக்கப்பட்ட (Guaranteed)
வருமானம் பெறுங்கள்.
Jeevan Utsav
மேலும் விபரங்களும், முதலீடு செய்யவும் அழைக்கவும்.
G. Gnanamoorthi PH: 8754431069

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.02.25

உடல் எப்படி உயிர் இல்லாமல் இருக்க முடியாதோ, அதுபோலவே ஆன்மாவும் அன்பில்லாமல் இருக்க முடியாது. அன்பே ஆன்மீகத்தின் வாசல். எனவே அன்போடு இருங்கள்.

02.02.25

உங்களுக்கு வெளியே எந்த மாற்றத்தையும் செய்ய முயற்சிக் காதீர்! உங்களுக்குள் எந்த மாற்றமும் நிகழாது. உங்களுக்குள்ளேயே மாற் றங்களைச் செய்யுங்கள். வெளியே தானாக மாற்றம் வரும்!

03.02.25

அனைத்தையும் நானே செய் கின்றேன் என்ற எண்ணமே அகந்தையை உருவாக்கும். நாம்

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

இறைவனின் கருவியே அன்றி இறைவன் அல்ல!

04.02.25

கடந்த காலத்தைப் பற்றிய வருத்தமும், எதிர் காலத்தைப் பற்றிய கவலையும், நிகழ்காலத்தின் ஆனந்தத்தை அழித்துவிடும்.

05.02.25

புதுப்புது கடவுள்களை உருவாக்கியது போதும். உன்னையே கடவுளாக மாற்றிப் பார்! உன்னை உருவாக்கிய கடவுள் யார் என்று தெரியும்.

06.02.25

உங்களுக்குண்டான பொறுப்பை மற்றவர்களின் மீது சுமத்தாதீர். அதை நிறுத்துங்கள். அதுவே உங்களுக்கு முதல் விடுதலை.

07.02.25

நாம் பிறந்திருப்பது, நாம் மறுபடி பிறக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டுமோ அதை செய்து முடிப்பதற்குத்தான். இறப்பது மறுபடி பிறக்காமல் இருப்பதற்குத்தான். எனவே நல்ல பிறவியைவிட நல்ல மரணத்தை விரும்புங்கள்.

08.02.25

அமைதியான வாழ்க் கைக்கு இரண்டு வழிகள்! ஒன்று யாரை யாவது நீ வேதனைப்படுத்தினால் முதலில் மன்னிப்பு கோருவது நீயாக இருப்பது. இரண்டு, அப்படி யாராவது உன்னை வேதனைப் படுத்தி விட்டால் முதலில் மன்னிப்பது நீயாகவே இருப்பது.

09.02.25

தான் கற்றதை கடைபிப்பவனே உண்மையான பக்தனாக இருக்க முடியும். மற்றவர்களின் பாராட்டை எதிர்பார்த்து காரியம் செய்வதில் ஒரு புண்ணியமும் இல்லை.

10.02.25

செய்வது இறைக்காரியமாக இருந்தால் மற்றவர்கள் கூற்றுக்கு செவி சாய்க்காதே!

11.02.25

தனக்குள் வீற்றிருக்கும் இறைவன் தனது எதிரிக்குள்ளும் வீற்றிருப்பான் என்பதை அறிவதே ஆத்மஞானம்.

12.02.25

சீடன் தயாராக இருந்தால் இறந்து போன குரு கூட ஞானம் கொடுக்க முடியும். சீடன் தயாராக இல்லை என்றால் உயிரோடு இருக்கும் குருவால் கூட ஒன்றும் செய்ய முடியாது.

13.02.25

மற்ற உறவுகளோடு என்ன குளறுபடிகள் ஏற்பட்டாலும், குரு என்ற உறவை இறுக்கிப் பிடித்துக் கொண்டால் அதுவே மிகப்பெரிய நிறைவைக் கொடுக்கும். மற்ற உறவுகளோடு எப்படி உறவு வைத்துக் கொள்வது என்ற ஞானமும் கிட்டும்.

14.02.25

விழித்த உடன் கனவு பொய்யாகிவிடும். மெய்ஞானம் பெற்றால் உலக விவகாரங்கள் எல்லாம் பொய்யாகிவிடும்.

15.02.25

ஆன்மீகம் என்பது தனியாக துறவு வாழ்க்கை வாழ்வது என்பதல்ல! மனித சமுதாயம் முழுவதையும் ஒரே குடும்பமாக கருதி பலவகையில் ஒருமையை அறிந்துணர்ந்து இணைந்து வாழ்வதே ஆன்மீகமாகும்.

16.02.25

முட்டாள்களுடன் வாதம் செய்யாதீர். அடுத்தவர்களுக்கு யார் முட்டாள் என்று தெரியாமல் போய்விடும்.

17.02.25

நாம் எந்த நிலையில் இருக்கின்றோமோ அந்த நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு அழைத்துச் செல்பவரே சற்குரு.

18.02.25

யோகம் கடுமையான வழிதான். ஆயினும் "சிவம்" என்னும் முக்தி உண்டு. மற்ற ஏனைய அனைத்து வழிகளிலும் "சக்தி" மட்டுமே உண்டு. திருப்தி என்பது ஒருபோதும் கிட்டாது.

19.02.25

எதையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். புரிந்து கொள்ளுங்கள். ஏற்றுக்கொள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும் மிகப்பெரிய இடைவெளி உள்ளது.

20.02.25

அனுபவத்தில் சிலர் அதிகமாகப் பேசுவார்கள். அதே அனுபவத்தில் சிலர் மௌனியாக மாறுவர்.

21.02.25

வாழ்நாளில் மிகவும் இனிய பருவம் இளமை. ஆனால் அதை முதுமையில்தான் உணரமுடியும்.

22.02.25

கோபம் மனிதனை மாற்றும். மௌனம் வாழ்க்கையையே மாற்றும்.

23.02.25

உண்மையை நம்புவது "பக்தி", உண்மையின்படி நடப்பது "மார்க்கம்", அதன் உண்மையை அறிவதே "ஞானம்".

24.02.25

எப்போதும், யாரிடமும் உங்களது அன்பை நிரூபிக்க முயலாதீர்கள்! ஏனெனில் அங்கே அன்பு இருக்காது.

25.02.25

விதண்டாவாதம் செய்பவர்களிடமும், குழப்பவாதிகளிடமும் கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். ஏனெனில் அவர்கள் சுய உணர்வு அற்றவர்கள்.

26.02.25

கடவுளை அறிவதற்கு ஆயிரக்கணக்கான வழிகள் இருக்கும் போது நான் ஏன் முட்டாள்தனமாக நம்ப வேண்டும்.

27.02.25

அசையும் பொருட்களின் மீது பற்று இருப்பவர்களுக்கு ஞானியின் வார்த்தைகள் காதில் விழாது.

28.02.25

நீங்கள் உணர்ந்து கொள்ளும் ஞானம் பிறருக்கு கற்றுக்கொடுக்க அல்ல. உம்மை உணர்ந்து கொள்வதற்கே! ●

குருவுடன் ஓர் நாள்



கடந்த 08.03.25 சனிக்கிழமை மதியம் குருஞ்செய்தியில் 09.03.25 ஞாயிறன்று தியான வகுப்பு ரத்து செய்யப்படுகிறது என்ற தகவலை படித்ததும் குருவிடம் அலைபேசி வாயிலாக தகவலை கேட்டறிந்தேன். சொந்த வேலை காரணமாக தான் பிறந்த திண்டுக்கல் மாவட்டம் அம்மைநாயகனூர் செல்வதாக கூறினார். ஊர் பேரை கேட்டதும் குருவைத் தேடி புத்தகத்தில் இடம்பெறும் சம்பவங்கள் என் நினைவுக்கு வந்தது.

ஆர்வமிகுதியால் சொந்த வேலை என்று சொன்னதையும் மீறி நானும் உங்களோடு வரட்டுமா என்று கேட்டேன். சிறு தயக்கத்திற்கு பின்னரே சரி என்றார் குரு. கூடவே நண்பர் ராஜசேகரையும் அழைத்துக் கொள்ளலாமா என்றேன் அப்போதும் யோசித்தே சரி என்றார். அவர் சொந்த வேலைக்கு பின்னால் என்ன இருக்கிறது என்பது எனக்கு தெரியாது என் சிந்தை முழுவதும் குரு பிறந்த ஊராகிய அம்மைநாயக்கனூரை பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மட்டுமே இருந்தது

சென்னையில் இருந்து மாலை 4 மணிக்குப் புறப்பட்டு தொடர்ந்து பயணித்து ஓர் உணவகத்தில் இரவு உணவு அருந்தினோம். அப்போது குரு அவர்கள் செல்லும் வழியில் சமயபுரம் கோவிலில் இரவு தங்கிவிட்டு விடியற் காலையில் திண்டுக்கல் செல்லலாம் என்று கூறினார். நண்பர் ராஜசேகரோ மதுரை சென்று தங்கிவிட்டு

காலை புறப்படலாம் என்று மாற்று யோசனையைக் கூறினார்.

குரு என்பவர் நாம் தொட முடியாத உயரத்தில் இருந்தால் தான் குருவின் மதிப்பை நாம் உணர்ந்து கொள்ள முடியும் என்பது எண்ணவோ உண்மை தான் என்பது அப்போது எங்களால் உணரமுடியவில்லை. ஏன் என்றால் குரு எங்களுடன் சகஜமாக உண்டு,உரையாடிக் கொண்டிருப்பதால் அவர் கூறும் சூட்சும விசயங்களை நாங்கள் கவனிக்க தவறுகின்றோம் என்பதை பின்னால் குரு கூறியதும்தான் உணர்ந்தோம்.

குரு கூறியபடி சமயபுரத்தில் இரவு தங்கியிருந்தால், குரு விற்கும் சமயபுரத்திற்கும் உள்ள தொடர்புகளை நிறைய கூறி யிருப்பார். நாங்கள் அதை தவறவிட்டுவிட்டோம். ஏன் என்றால் சமயபுரத்தாள் எனது தாய் என்று அடிக்கடி குரு கூறுவார். குருவின் குணம் என்ன வென்றால், அவர் கூறும் ஒரு விசயத்தை நாம் மறுத்துவிட்டால் பிறகு அதைப்பற்றி பேசவோ, வற்புறுத்தவோ மாட்டார்.

ஆகவே நாங்கள் குருவின் பேச்சில் உள்ள சூட்சுமத்தை அறியாமல் சமயபுரத்தை தாண்டி தொடர்ந்து பயணித்து விடியற்காலை திண்டுக்கல் வந்து விட்டோம். காலைக்கடன்களை முடித்து குளித்துவிட்டுச் செல்லாம் என்று பல தங்கும் விடுதிகளில் சென்று முயற்சி செய்து பார்க்கின்றோம். அன்று முகூர்த்த தேதி என்பதால் எங்குமே அறை காலியாக இல்லை.

எனவே வாடிப்பட்டி பேருந்து நிலையம் சென்று, காரிலேயே சற்று ஓய்வெடுத்துக் கொண்டு, அங்கேயே குளித்து முடித்து விட்டு ஊருக்கு செல்லலாம் என்று முடிவெடுத்தோம்.அங்கிருந்து அம்மைநாயக்கனூர் மிக அருகில் தான் உள்ளது.

குருவும் எனக்கு ஊருக்குள் காலை பத்து மணிக்குத்தான் வேலை. அதற்கு இன்னும் 4 மணிநேரம் இருக்கின்றது. ஆகவே நாம் இப்போது நான் தவம் செய்த சிவன் கோவில், கஞ்சா சாமியார் மடத்திற்கும் அழைத்துச் செல்கின்றேன். வாருங்கள் என்று கூற நாங்களும் சூடாக ஒரு தேனீர் அருந்திவிட்டு காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டோம்.

எங்கள் குரு யோகி ஸ்ரீராம்



சொ. அகஸ்டின்

பாபா அவர்கள் எழுதிய "குருவைத் தேடி" புத்தகத்தில் தேடல் 33 ல் குறிப்பிட்டிருக்கும் மலையாள சுவாமி தங்கியிருந்த சிவன் கோவிலுக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒத்தையடி பாதையாக சிறு குன்றின் மீது ஏறிதான் செல்ல முடியும் என்று பதிவு செய்திருப்பார். ஆனால் இப்போது குன்றை சுற்றிக்கொண்டு ஒரு வாகனம் செல்லும் அளவிற்கு பாதை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

விடிந்தும் விடியாத காலைப் பொழுது. கரடுமுரடான பாறைகள் நிறைந்த அப்பாதை வழியாக யானை அசைந்து செல்வது போல் எங்கள் வாகனம் மெல்ல மெல்ல அசைந்து சென்றது. சிறிது தூரத்தில் எங்களை வரவேற்பது போல குடை விரித்தது போன்று ஒரு மரம் வித்தியாசமாக வளர்ந் திருந்தது. அதை கண்டதும் கோவில் அருகில் வந்துவிட்டோம் என்று குரு கூறினார்.

கோவிலை சுற்றிலும் கம்பி வேலி போட்டிருந்தார்கள். எங்களைத் தவிர அங்கு வேறு யாருமில்லை. மெதுவாக காரைவிட்டு இறங்கி நடந்தோம். மயான அமைதிக்கு இடையில் குயிலும், சிட்டு குருவி யும் இனிமையாக கூவி எங்களை வரவேற்றன.

மலையாள சாமியாரோடு உரையாடிய நிகழ்வுகள் மற்றும் ஜீவ சமாதி அடைந்த அகோரி ஆனந்த் ஆகியோர்களை பற்றி விவரித்துக் கொண்டே சன்னதி அருகில் உள்ள ஓர் நீரூற்றைக் காண்பித்து இந்த நீரூற்றில் இருந்துதான் தண்ணீர் சேகரித்து அருந்துவோம் என்றார் குரு. தரைதளத்தில் இருந்தது இரண்டுக்கு இரண்டு என்ற அளவில் பீடம் அமைத்து கம்பி வேலி போட்டிருந்ததால் அத்தண்ணீரை எங்களால் பருக முடியவில்லை.

கோவிலை சுற்றி வரும்போது நமது குரு, அவரது குருவின் நினைவாக பிரதிஷ்டை செய்திருந்த நாகர்சிலையை காண்பித்தார். பீடத்தின் மேல் கம்பீரமாக காட்சி கொடுத்தார் நாகராஜா. அவரை வணங்கிவிட்டு அதன் அருகே ஓர் பாறையில் குருவுடன் சிவன் கோவிலில் அவரது அனுபவங்களைப்பற்றி ஒருமணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

நாங்கள் அங்கு பேசிக் கொண்டிருந்த இரண்டுமணி நேரத்தில் அங்கு எங்களைத்தவிர வேறு யாரையும் காணோம். இந்த காலத்திலும் இப்படி இருக்கிறது. நமது குரு அங்கு தவம் புரிந்த மூப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆள் நடமாட்டமே இருந் திருக்காது அல்லவா? அப்படிப் பட்ட இடத்தில் குருவும், மலையாள சுவாமியும் மட்டும் இருந்திருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருந்தது.

இதையெல்லாம் கேட்கும் போது அங்கிருந்து புறப்பட மனம் இசைந்து கொடுக்கவில்லை நேரமின்மை காரணத்தால் புறப்படலாம் என்று எழுந்து



கொண்டோம். அப்போது சற்று தூரத்தில் இரண்டு மயில்கள் ஒன்றோடொன்று குதூகலித்து கொண்டிருந்தன அதில் ஒரு மயில் தோகையை விரித்து ஆடியது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. கோவிலை விட்டு வெளியே வந்ததும் குடை மரத் திடம் நின்று தூரத்தில் இருந்த சிறுமலையை காண்பித்து அதோ அந்த மலை உச்சியில் தான் மலையாள சாமியாரின் ஆணைக்கிணங்க இரவாதம் செய்வதற்காக சென்று வந்தேன் என குரு விவரித்தார்.

பல இரகசியங்களை உள்ளடக்கி சாந்தமாக காட்சியளித்த சிறுமலையை பார்த்துக்கொண்டே மெதுவாக கடந்து வந்தோம். வரும் வழியில் கஞ்சா சாமியார் சமாதியை தரிசித்து அம்மைநாயக்கனூர் ஊர் உள்ளே நுழைந்தோம். குருவின் உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவரும் குருவிற்கு நமஸ்காரம் செய்து வரவேற்றார்கள் சிலருக்கு புன்சிரிப்பும், சிலருக்கு மௌனமும் பரிசாக அளித்தார் குரு அவர்கள்.

சிறிது நேரம் கழித்து குருவின் சகோதரர் எங்களை தேனீர் கடைக்கு அழைத்துச் சென்றார் பின்னர் அவர் சொந்தமாக நடத்திவரும் வியாபார நிறுவனத்தை காண்பித் தார். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் குருவின் கரங்களால் திறந்துவைக்கப்பட்டது இன்று இரண்டு கடையாக இணைத்து பெரிய ஸ்டோராக மாற்றம் அடைந் திருக்கின்றது என அதன் விரிவாக் கத்தை கூறி ஆனந்தப்பட்டார் குருவின் சகோதரர்.

பிறகு அருகே உள்ள பெருமாள் கோவிலை சுட்டி காட்டினார் குரு அவர்கள். தேடல் 33 ல் சிறுமலைக்கு செல்வதற்காக விடியற்காலை காத்திருக்கும்



போது பெரியவருடன் உரையாடலும் மலையாள சாமியாரை கண்டதும் ஓட்டம் பிடித்தை குருவைத் தேடியில் படித்தது நினைவுக்கு வந்தது.

அங்கிருந்து புறப்பட்டு குருவின் உறவினர் வீட்டை ஒவ்வொன்றாக காட்டினார் சகோதரர். அவரை இடைமறித்த நண்பர் ராஜசேகர் அனைவருக்கும் வீடு இருக்கின்றது எங்கள் குருவும் இங்கு தானே பிறந்தார் அவருக்கான இடம் இருக்குமே அது எங்கு உள்ளது என வினவினார்? இது தான் என்று உறுதியாக கூறவில்லை அவர். ஆனால் இங்கு தான் தங்குவார் என கூறி ஒரு சிறு காலிமனையை காண்பித்தார்.

ஆனால் அவ்விடத்தில் தான் குருவின் பூர்வ ஜென்ம பிறவி முருகையா அவர்கள் தவம் புரிந்து சமாதியான இடம் என்றும், அம்மனைக்கு எதிரே சிறிய காலி மனையும் இருந்தது. அதில்தான் நாகர் படமெடுத்து முருகையாவை தரிசித்த இடம் என்றும் குருவைத்தேடியில் தான் பதிவுசெய்திருப்பதாக குரு அவர்கள் எங்களுக்கு விளக்கினார்கள்.

ஊருக்குள் இவ்விரண்டு இடம் மட்டுமேகாலிமனைகளாகஉள்ளன. வந்த வேலை முடிந்து புறப்படும் போது குருவின் தங்கையின் வீட்டை காட்டினார்கள். அதைப் பார்த்ததும், அவ்வீட்டு மொட்டை மாடியில் குரு தூங்கி கொண்டிருக்கையில் வீட்டு வாசலில் நடுநிசியில் மாட்டு வண்டியில் சிறு பிள்ளைகள் விளையாட அதில் ஒரு பெண்மணி மட்டும் குருவை கீழே குதி என்று சொன்னதும்தான் எனக்கு நினைவுக்கு வந்தது. (இதை தேடல் 32 ல் குறிப்பிட்டிருப்பார்)

மாட்டு வண்டி நின்ற இடத்தில் எங்கள் வாகனம் நின்று கொண்டிருந்தது . அவ்விடத்தின் எதிரே குருவிற்கு தீட்சை அளித்த நாகராஜா இருந்த வீட்டையும் பார்த்தோம். நாங்கள் அங்கே உள்ளே நுழைய முடியாத சூழல்.குரு வந்திருப்பதை தெரிந்து கொண்ட சடையம்மா வெளியே வந்து குருவை வரவேற்றார்கள். சடையம்மாவை பார்த்தது ஆனந்தமாக இருந்தது.

நாகராஜவே அவர் தலைமேல் இருப்பது போல் முடி தோற்றம் அளித்தது. சிறிது நேரம் குருவிடம் பேசிவிட்டு அன்போடு வழியனுப்பி வைத்தார்கள். மிக மிக அற்புதமான பயணம். எங்கள் குரு பிறந்த ஊரையும், அவர் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்த இடங்களையும் எங்கள் குருவுடனேயே சென்று பார்த்தது எங்களது கொடுப்பினை என்று தான் கூற வேண்டும். எங்களது குருவிற்கு மிக்க நன்றி!

குரு வாழ்க! குருவே துணை!

“குரு” அவசியமா?



உலகில் ஒவ்வொரு உயிரினமும் தன் வாழ்க்கைப் பற்றிய அறிவை தன் சக உயிரினங்களிடமிருந்து தான் பெறுகின்றது. உடை உடுத்தலை, உண்ணுதலை, உறங்கு தலை, கூடிப்புணர்தலை, இயற்கை உந்துதல் கொடுத்தாலும் அது சக உயிரினங்கள் சொல்லிக் கொடுக்க, அந்த அனுபவத்தை கிரஹித்துக் கொண்டு இன்னும் சீராக வாழ்கிறது. இந்த அறிவே மெய்ஞானம் எனப்படும்.

எல்லா செயல்களையும் நீங்கள் பிறரிடமிருந்து கற்றுக் கொள்கிறீர்களே அன்றி எதையும் நீங்களாக அறிந்து கொள்ளவில்லை. அறிந்து கொண்டதை நேர்த்தி யாக செய்கிறீர்கள் என்று வேண்டு மானால் சொல்லலாம். ஆனால், வாழ்வின் அறிவு என்பது சக உயிரின மிடத்திருந்தே வருகிறது. தலை வாருதலிலிருந்து காலணி அணிவது வரை மற்றவர்கள் சொல்லி தந்துதான் அறிந்து கொள்கிறீர்கள்.

ஆனால் வாழ்வின் ஆதாரமாக உள்ள ஆத்ம தாகத்தை, உயிரின் தவிப்பை, தன் இருப்பை அறிவது என்பதை எவரும் அறியாமல்

நீங்களாக உணர்ந்து கொள்ள முடியுமா? இதை நானாக தெரிந்து கொள்வேன் என்று இறுமாந்து திரிவது நல்லதா. கடவுள் அறிதல் அல்லது தன்னை அறிதல் என்கிற விஷயத்திற்கு வெகு நிச்சயம் ஒரு வழிகாட்டி தேவைப்படுகிறார். அந்த வழிகாட்டிக்கு குரு என்று பெயர்.

குரு என்பவர் சாக்கு போக்குக் காக உங்களை சில மந்திர ஜபங் கள் பூஜைகள் செய்யச் சொல்லி மெல்ல மெல்ல பிரம்ம ரகசியத்தை உபதேசம் செய்வார் என்று சொல்லப்படுகின்றது. கடவுள் தேடுதல் எதற்காக என்ற கேள்வி எழவில்லை என்றால் வாழ்வு பூரணமாகவில்லை என்று அர்த்தம். தன்னை அறிதலைப் பற்றிய ஏக்கம் எழும்பொழுது. வெகு நிச்சயமாக குரு என்பவர் தேவைப்படுவார்.

அந்த குரு தன்னை அறிந்தவராக இருக்கிறபொழுது உங்களுடைய தவிப்பை முற்றிலுமாய் உணர்ந்து உங்களை அறியாமல் உங்களை உங்க ளுக்குள் தள்ளுகின்ற ஆற்றலையும் பெற்றிருப்பார். அந்த ஆற்றல் மிக ரகசியமாய் உங்களில் பாய்ந்து உங்களுக்குள் உங்களை அறிவிக்கும். இது விஞ்ஞான பாடமல்ல. அடிப் படையாய் புரிந்து கொள்வ தற்கும், பேசி தெரிந்து கொள்வதற்கும். படித்த புத்தகங்களி லிருந்து கற்று கொள்வதற்கு உண்டான விஷயமுமல்ல.

இது ரகசியமானது. ரகசியம் என்பதற்கு வேறு ஒருவருக்கு சொல்லக்கூடாது என்ற அர்த்த மில்லை. எப்படி உள்ளே வந்தது என்றே தெரியாத ரகசியம் இது. நீங்கள் எப்படி மாறினீர்கள் என்றே தெரியாத ரகசியம் இது. உங்களை அறியாது உங்களை மாற்றுவது என்பது தன்னை அறிந்த குருவால் வெகு நிச்சயம் இயலும்.

எனக்கும், கடவுளுக்கும் இடையே இன்னொருவர் எதற்கு என்று கேள்வி வருவது மிகப் பெரிய அறியாமை.

தான் எல்லாம் அறிந்து விட்டோம், தன்னால் சகலமும் அறியமுடியும் என்கிற அறியாமை. உங்களுக்கு சைக்கிள் ஓட்ட சொல்லிக் கொடுத்தவரையே குரு என்று கொண்டாடிக் கொண்டி ருக்கிற பொழுது கடவுள் தேடலை தானாக அறிந்து கொள்வேன் என்று கொக்கரிப்பது எவ்வளவு பெரிய பேதமை. உங்களை அறிவது தான் சரியான அறிவு. ஆனால் தன்னுள் தான் மூழ்குவது என்பது மிக மிக கடிமனான விஷயம்.

குரு என்பவரால் மட்டுமே உங்களை உங்களுக்குள் தள்ள முடியும். தங்களை அறிய வேண்டும் என்ற ஆவலுள்ளவர்களுக்கு குருவினுடைய தேடலும் கூடவே வரும். அவருக்கு குரு அவசியமா என்ற கேள்வியே இருக்காது. குரு எங்கே என்கிற ஆவல்தான் இருக்கும்.

யார் குரு. நான் தான் குரு என்று சொல்லிக் கொள்கிறவர்கள் உங்களுக்கு குரு அல்ல. தன்னை உணர்தலே கடவுள் உணர்தல் என்கிற மகாவாக்கியம் உணர்ந்த வரே குரு. அவர் தன்னை

உணர்ந்தவர் என்று சொல்லிக் கொள்வதே இல்லை. கடவுள் தெரிந்துவிட்டது என்று குதிப்பதும் இல்லை. மாறாய் அவர் வாழ்க்கை முற்றிலும் மற்ற மனிதர்கள் வாழ்க்கையில் இருந்து வேறுபட்டிருக்கிறது.

வாழ்வின் அநித்தியம், வாழ்வின் அபத்தம் புரிந்தபோது உள்ளுக்குளிலிருந்து ஒரு கருணை வெள்ளம் புறப்பட்டு சகலரையும் அணைத்து கொள்கிறது. யாரை, எப்பொழுது, எங்கு வேண்டுமானாலும் இழந்து தொலைப்போம் என்கிற பரிதவிப்பு இருப்பின் யாரை வெறுக்க முடியும். எவரும் இங்கே நிரந்தரமில்லை என்பது மிக தெளிவாக புரிந்து விட்டால் எவரை வெறுக்க முடியும் எனவே எவரையும் வெறுக்காத கருணை மழை தான் குரு.

கருணை உள்ளவர் முகத்தில் அற்புதமான தேஜஸ் இருக்கும். அவர் ஒவ்வொரு அசைவும் அன்பை பொழியும். கடவுள் ரூபமாகவே இருக்கும். குரு எனபவர் உபன்நியாசம், பிரசங்கங்கள் நிகழ்த்துவதை காட்டிலும் தனித்தனியே ஒவ்வொரு மனிதரின் உள்ளுக்குள் இருக்கின்ற ஆன்மாவைத் தொட்டு உசுப்பிவிடுகின்றார். எவரைப் பார்த்ததும் உள்ளுக்குள் பெரிதாய் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டு அவரை உங்களை அறியாமல் வணங்கத் தோன்றுகிறதோ அவரை பின்பற்றத் தோன்றுகிறதோ, அவரை கொண்டாட ஆசை எழுகிறதோ, அவரை உங்கள் குரு என்று கொள்ளலாம்.

இங்கே ஒரு விஷயம் கவனிக்கப்பட வேண்டும். மக்களுடைய யோக்கியதைக்கு ஏற்ப அரசாங்கம் அமைவது போல, கலை இலக்கியம் இருப்பது போல, உங்களின் யோக்கியதைக்கு ஏற்ப உங்களுக்கு குரு கிடைப்பார். உங்களுக்குக் காசுதான் வாழ்வின் பிரதானம் என்றால் உங்களுக்கு காசு தருகின்ற குரு கிடைப்பார்.

உங்களுக்கு சுகபோகம்தான் பிரதானம் எனில் சுகபோகம் தருகின்ற குரு கிடைப்பார். உங்களுக்கு கடவுள் தேடுதல்தான் பிரதானம் எனில் கடவுளை அறிந்த குரு கிடைப்பார். உங்கள் யோக்கியதைக்கு ஏற்ப குரு கிடைத்த பிறகு தான் உங்களை பற்றியே உங்களுக்கு தெரியவரும். குருவை எங்கே தேடுவது. கடைகளில் குரு தொங்கிக் கிடக்க மாட்டார். குரு இன்னவிதமாக இருப்பார் என்று எவராலும் சொல்லமுடியாது.

உங்கள் தேடல் உக்கிரமடைந்தால், ஒருமுகப்பட்டால் குரு உங்களை நேரே வந்து சந்திப்பார். அவராகவே வந்து உங்களை தொட்டு உலுக்குவார். என்னைத் தானே தேடிக் கொண்டிருக்கிறாய். இதோ என்று எதிரே வந்து நிற்பார். குரு தேடுதல் என்பது மனம் ஒருமுகப்பட்ட ஒரு உணர்வு. அந்த உணர்வு நிச்சயம் உங்களுக்கு குருவை கொண்டு வந்து கொடுக்கும்.

குரு வாழ்க! குருவை துணை!

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்-13

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா




கடவுள் உருவங்கள், யாக குண்டம், தீ, ஒளி, சூரியன், நீர், பிரம்மத்தை உணர்ந்தவர் ஆகிய ஏழும் வழிபாட்டுக்குரியவை என்றாலும் சத்குருவே இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்தவர். சத்குருவின் சகல அடையாளங்களுடன் அவதரித்த சாயி தனது அடியவர்களை தன்னிடம் இழுத்து அவர்களை எப்படி ஆத்மஞானம் அடைய உதவினார் என்பதைக் காண்போம்.

நல்லவரைக் காத்து தீயவரை அழிப்பதே புராணங்களில் கடவுள்களின் குறிக்கோள் ஆகும். ஆனால் ஞானிகளின் இறையருள் சேவையோ முற்றிலும் மாறுபாடானது ஆகும். அவர்களுக்கு நல்லவரும், தீயவரும் ஒன்றே! தீயது செய்பவர்களுக்காக வருந்தி அவர்களுக்கு நன்மை செய்து அவர்களை ஒழுங்குபடுத்துகிறார்கள். அவர்கள் இருளை அழித்து ஒளியை பாய்ச்ச வந்தவர்கள்.

ஞானிகளிடம் கடவுள் வசிக்கின்றார். உண்மையில் ஞானிகள் கடவுகளிடம் இருந்து வேறானவர் அல்ல. பக்தர்களின் நன்மைக்காக அவதரிக்கும் ஞானிகளுள் ஒருவரே நமது சாயிபாபா. ஞானத்தின் உச்சக்கட்டத்திலும், தெய்வீக ஒளி சூழப்பட்டும் பிரகாசித்த சாய் பாபா உலகில் உள்ள எல்லா உயிரினங்களையும் ஒன்றாக நேசித்தார். அவர் பற்றுகள் சிறிதும் இல்லாதவராக இருந்தார்.

பகைவர்கள், நண்பர்கள், அரசனும், ஆண்டியும் அவருக்கு



ஒன்றே! ஆனால் அவராக அடியவர் களை அழைத்தாலொழிய ஒருவரும் அவரை அணுக முடியாது. எவர் ஒருவரை சாயி அழைப்பதில் லையோ அவருடைய காதுகளை சாயியின் லீலைகள் எட்டாது. அவருடைய உருவம் அவர்களது கண்களுக்கு தென்படாது.

ஒரு சிலர் பாபாவை பார்க்க விரும்பி எவ்வளவோ முயற்சித்தனர். ஆனால் அவர் இறக்கும்வரை அவரை தரிசிக்கும் பாக்கியம் கிட்ட வில்லை. பாபாவின் தரிசனத்தை பெற விரும்பி பலரது ஆசைகள் இங் கனம் நிறைவேறாமல் போனது. ஆனால் வெறும் அதிர்ஷ்டத்தினால் சீரடி சென்று பாபாவின் தரிசனத் தைப்பெற்ற சிலர் நீண்ட நாட்கள் அங்கு தங்க முடிந்திருக்கின்றதா?

ஒரு போதும் முடியாது. அங்கு ஒருவரும் தாமாக செல்ல முடியாது. அப்படியே பாபா அழைத்து அங்கு சென்றவர்களும் பாபா அனுமதித்த நாட்கள் மட்டுமே அங்கு தங்க முடியும். அவ்விடத்தைவிட்டு செல்லும்படி பாபா கூறிவிட்டால் உடனடியாக அவ்விடத்தைவிட்டு போய்விடவேண்டும். எனவே சீரடியில் அனைத்தும் பாபாவின் விருப்பத்தின் பேரிலேயே நடை பெற்றது.

ஒருமுறை தாத்யா சாகேப் நூல்கரின் நண்பரான டாக்டர் பண்டித் என்பவர் சீரடிக்கு வந்து பாபாவை தரிசனம் செய்து விட்டு மசூதியில் சிறிது நேரம் அமர்ந் திருந்தார். பாபா அவரை அழைத்து தாதாபட் கேல்கரிடம் சென்று தங்குமாறு கூறினார். தாதாபட் அவரை அன்போடு வரவேற்று நன்கு கவனித்துக்கொண்டார்.

மறுநாள் தாதாபட்டும், டாக்டர் பண்டித்தும் பாபாவை வழிபாடு செய்வதற்காக மசூதிக்கு வந்தனர். முதலில் தாதாபட் பாபாவை வழிபாடு செய்தார். இதுவரை யாரும் பாபாவை வழிபடும் போது அவரது நெற்றியில் சந்தனம் பூசி வழிபட்டதில்லை.

அந்த தைரியம் மகல்சாபதியைத் தவிர வேறு யாருக்கும் இதுவரை வந்ததில்லை.

அவரும்கூட சந்தனத்தை பாபாவின் கழுத்தில்தான் பூசுவார்.

ஆனால் தாதாபட்டுடன் பூஜைக்கு வந்திருந்த டாக்டர் பண்டித், பாபாவின் வழிபாட்டிற்கு தனது முறை வந்தபோது தனது பூஜை தட்டில் இருந்த குழைக் கப்பட்ட சந்தனத்தை கைகளில் எடுத்து யாரும் எதிர்பாரா

வண்ணம் பாபாவின் நெற்றியில் மூன்று பட்டைகளை இட்டார்.

பாபாவோ அனைவரும் ஆச்சரியப்படும்படி அமைதியாக இருந்தார்.

பலமுறை இதே போன்று தாதாபட் உட்பட பலர் பாபாவின் நெற்றியில் சந்தனம்பூச முயன்ற போது பாபா கத்தி கூச்சலிட்டு இருக்கின்றார். ஆனால் டாக்டர் பண்டித் தனது நெற்றியில் சந்தனம் பூசியதும் ஏதும் நடக்காததுபோல் அமைதியாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்த தாதாபட் அன்று மாலை பாபாவிடம் தங்களது நெற்றியில் நாங்கள் சந்தனம் பூச முயன்ற போது தடுத்த நீங்கள் டாக்டர் பூசும் போதுமட்டும் தடுக்க வில்லையே ஏன்? என்று கேட்டார்.

அதற்கு பாபா புனுமுறுவல் பூத்தபடி, டாக்டர் பண்டித் என் நெற்றியில் சந்தனம் பூசும்போது, தனது குருவான காகாபுராணிக் காக உணர்ந்து அவருக்கு செய்வதைப் போன்று செய்தார். ஆகையால் தடுக்கவில்லை. என்றார். பிறகு தாதாபட்டிடம் விசாரித்தபோது, அவரும் அதையேக் கூறினார்.நான் அங்கு பாபாவைப் பார்க்கவில்லை. எனது குரு காகாபுராணிக்காகவே உணர்ந்தேன். ஆகவே அவரது நெற்றியில் நான் எப்போதும் சந்த னத்தை பூசியே வழி படுவேன். அதை போன்றே பாபாவையும் வழிபட்டேன் என்றார்.

பக்தர்கள் விரும்பியவாறு வழிபட பாபா ஏன் மறுத்தார் என்றால், வழிபடுபவன் ஒன்றையே நம்ப வேண்டும். அதில் உறுதியாக இருக்க வேண்டும். மொத்தத்தில் அவனை அவனே நான் யார் என்பதை நன்கு உணர்ந் திருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான். அதைவிடுத்து, நான் பாபாவிற்கு பூஜை செய்தேன். நான் பாபாவிற்கு காணிக்கை அளித்தேன் என்ற அகங்காரத்துடன் தனக்கு பூஜை செய்பவனை பாபா எப்போதும் தன் அருகிலேயே விடுவதில்லை.

பாபா எப்போது ஒரு அடியவரை ஏற்றுக்கொள்வார் என்பதை யாரும் அறிய முடியாது. அது அவரது சுபாவத்தைப் பொறுத்தது. ஹாஜி சிதிக்பால்கே என்பவர் அதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

கல்யாணைச் சேர்ந்த சிதிக்பால்கே என்பவர் மெக்கா, மதினாவிற்கு புனித யாத்திரை சென்று விட்டு பாபாவைக்காண சீரடிக்கு வந்தார். சாவடியில் தங்கிக் கொண்டு தினமும் மசூதிக்கு வந்து பாபாவை தரிசிப்பதற்காக மசூதியின் முன்னால் இருந்த வெட்ட வெளியில் அமர்ந்து கொள் வார். இப்படியாக தொடர்ந்து ஒன்பது மாதங்கள் பாபாவின் அழைப்பிற்காக காத்திருந்தார்.

பாபா அவரை கடந்த ஒன்பது மாதங்களில் திரும்பிக்கூட பார்க்க வில்லை. மசூதியில் ஏறும்போதெல் லாம் கூச்சலிட்டு அவர் உள்ளே வருவதை தடுத்துவிட்டார். சிதிக்பால்கே தான் என்ன செய்வது என்று அறியாமல் மிகுந்த வருத்தமுற்றார். அனைவரிடமும் நான் மெக்கா, மதினாவிற்கு சென்று வந்தவன். இந்த பாபா என்னை

ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிக்க மாட்டேன் என்கிறார். என்று புலம்பித்தவித்தார்.

அருகில் இருந்த நண்பர் ஒருவர், கலக்க மடைய வேண்டாம் என்று ஆறுதல் கூறி பாபாவின் மிக நெருங்கி அடியவரான மாதவ்ராவ் மூலம் பாபாவை அணுக வேண்டி ஆலோசனை கூறினார். சிதிக்பால்கே இந்த யோசனையை ஏற்றுக்கொண்டு மாதவ்ராவிடம் சென்று தனக்காக பாபாவிடம் சிபாரிசு செய்யுமாறு கெஞ்சிக்கேட்டுக் கொண்டார்.

மாதவ்ராவும் பாபா சாந்தமாக இருந்த நேரம் பார்த்து ஹாஜியைப் பற்றி பேசினார். பாபா உங்களைத் தேடி வரும் எல்லோரையும் இந்த மசூதிக்குள் அனுமதிக்கும் நீங்கள், பாவம் அந்த முதியவரான ஹாஜியை ஏன் நீங்கள் மசூதிக்குள் அனுமதிக்க மறுக்கின்றீர்கள். அவரை ஒருமுறை உள்ளே அனுமதித்து ஆசீர்வதித்தால் என்ன? என்றார்.

அதற்கு பாபா, சாமா நீ உன்னைச்சுற்றி நடக்கும் விசயங் களை எல்லாம் புரிந்து கொள்ள முடியாதவனாக இருக்கின்றாய். இறைவன் அனுமதிக்கவில்லை என்றால் நான் என்ன செய்வது. அவரது அனுமதி இல்லை என்றால் என்னால் எப்படி மசூதியில் அனுமதிக்க முடியும். ஒன்று வேண்டுமானால் செய்! அவரிடம் சென்று நாளை பார்விக் கிணற்றுக்கருகில் உள்ள ஒற்றையடிப் பாதைக்கு வருவாரா என்று கேட்டுச்சொல் என்றார்.

சாமா அவரிடம் சென்று பாபா கூறியதைக்கூறி சம்மதமா என்று கேட்டார். அவர் உடனடியாக வருவதாக் கூறினார்.

மீண்டும் பாபா அவரிடம், "எனக்கு நாற்பதாயிரம் ரூபாய் களை நான்கு தவணைகளில் தரமுடியுமா? எனக்கேள் என்றார். சாமா மீண்டும் அவரிடம் சென்று கேட்க, ஹாஜியோ நாற்பதாயிரம் என்ன நான்கு லட்சம் கூட தருகின்றேன். என்றார்.

சாமா வந்து ஹாஜி கூறிய பதிலைக் கூறியதும் பாபா, அப்படியா நாங்கள் ஒரு ஆட்டை மசூதியில் வெட்டப்போகின்றோம். அவருக்கு அதன் மாமிசம், தொடை இவைகளில் எது வேண்டும் எனக்கேட்டு வா என்றார். ஹாஜியோ, சமையல் அண்டாவில் ஒட்டியிருக்கும் சிறு துணுக்கு கூடப் போதும் என்றார்.

இதைக்கேட்ட பாபா, உணர்ச்சி வசப்பட்டு தன் அருகில் இருந்த மண்கூஜா, பூஜைப்பொருட்கள், அனைத்தையும் ஹாஜியை நோக்கி வீசி எறிந்தார். பிறகு நேராக ஹாஜியிடம் சென்று, "நீ என்ன பெரிய ஹாஜியா, ஹஜ் யாத்திரை சென்று வந்துவிட்டால் நான் தான் பெரிய மனிதன் என்ற நினைப்பா? ஏன் நீ உன்னையே தற்பெருமை படுத்திக்கொள்கின்றாய். உனது நடவடிக்கைகளைப் பார்த்து அடுத்தவர்கள் அல்லவா உன்னை உயர்வாகப் பேச வேண்டும்.

நீ உனது மெக்கா யாத்திரை குறித்து அனைவரிடமும் கூறி பெருமை கொள்கின்றாய்?

ஆனால் நான் யார் என்பதை நீ அறிய முயற்சிக்கிவில்லை. சரி உன்னையாவது நான் யார் என்று உணர்ந்து கொண்டாயா என்றால் அதுவும் இல்லை. நான் மெக்கா சென்றேன், நான் மதினா சென்றேன், நான் ஹாஜி என்று கூறி பெருமை கொள்கின்றாய். குரானை நீ இவ்விதமாகத்தான் கற்று உணர்ந்தாயா?

என்று சத்தமிட்டுவிட்டு வழக்கமாக தான் அமரும் இடம் சென்று அமர்ந்துவிட்டார்.

ஹாஜிக்கு ஒன்றும் புரிய



வில்லை. பேய் அடித்ததுபோல் மிரண்டு போய் ஓர் ஓரமாக சென்று அமர்ந்துவிட்டார். சிறிது நேரம் கழித்து எழுந்து வந்த பாபா மீண்டும் ஹாஜியை நோக்கி வந்தார். இம்முறை ஹாஜி பயந்துபோய் எழுந்து கொண்டார். பாபாவைப் பார்த்ததும் கால்கள் இரண்டும் தன்னால் ஆடியது. அருகே வந்த பாபா தன் பையில் இருந்து ரூ.55/– எடுத்து ஹாஜியிடம் கொடுத்தார்.

அதன்பிறகு ஒரு கூடை மாழ்பழங்களை வாங்கி ஹாஜிக்கு கொடுத்தனுப்பினார். அதிலி ருந்து தான் உணவு அருந்தும் போது ஹாஜியையும் அழைத்துக் கொண்டார். அவ்வப்போது ஹாஜிக்கு சில ரூபாய்களை கொடுத் தார். இவ்வாறாக ஹாஜியை ஒன்பது மாதங்கள் காக்க வைத்து அவரது அகங்காரத்தை தானே விடும்படி செய்து தனது தர்பாரில் சேர்த்துக்கொண்டார்.

ஒருமுறை பம்பாயில் இருந்து காகா மகாஜனி ஒரு வராம் சீரடியில் தங்கி ஆனந்தமாக கோகுலாஷ்டமி விழாவை கண்டு மகிழ விரும்பி ஒரு வாரம் தங்குவதற்குண்டான ஏற்பாட்டுடன் சீரடிக்கு வந்தார். ஒரு வாரம் தங்குவதற்குண்டான ஏற்பாடுகளை செய்துவிட்டு தங்குமிடத்தில் திருப்தியாக குளித்து முடித்துவிட்டு பாபாவை தரிசிக்க மசூதிக்கு வந்தார்.

மசூதிக்கு வந்த காகா மகாஜனி பாபாவை தரிசித்து பணிந்து வணங்கி எழுந்தார். அவரை ஆசீர்வ தித்த சாயி, “எப்போது வீட்டிற்கு திரும்புவதாக உத்தேசம்” என்றார்.

பாபா இப்படிக்கேட்டதும் அதிர்ந்து போனார் அவர். இருப்பி னும், நீங்கள் எப்போது ஆணை யிடுகின்றீர்களோ அப்போதே புறப்படுகின்றேன் சாயி என்று பதிலளித்தார். உடனே பாபா சரி, இப்போதே புறப்படு என்றார்.

பாபாவின் மொழிகளை யாரா லும்மீறமுடியாதுஏனெனில்சீரடியில் பாபாவின் மொழிகளே சட்ட மாகும். எனவே காகாமகாஜனி

உடனடியாக ஊருக்கு புறப்பட்டார். மறுநாள் காலையில் தனது அலுவலகத் திற்கு சென்ற போது, அவரது முதலாளி தன்னுடைய வரவுக்காக கவலையுடன் எதிர்பார்த்திருப்பதைக் கண்டார். இவரைப் பார்த்ததும் அவரது முதலாளி, நான் நேற்றுதானே சீரடிக்கு தபால் போட்டேன். எப்படி அதற்குள் வந்துவிட்டாய். தபால் கிடைத்திருக்காதே. என்று ஆச்சர்யப்பட்டார்.

அவரது மேலாளர் திடீரென நோய்வாய்ப்பட்டதால், காகா மகாஜனி இருந்தால்தான் அலுவலக வேலையை சமாளிக்க முடியும் என்று உடனடியாக புறப்பட்டு வரும்படி சீரடிக்கு தபால் அனுப்பியிருந்தார். ஆனால் தபால் கிடைக்கும் முன்னே அனைத்தும் அறிந்த பாபாவால் உணர்த்தப்பட்டு காகா உடனடியாக புறப்பட்டு ஊருக்கு வந்துவிட்பார். என்பதை அறிந்த இருவரும் பாபாவின் அந்தர்ஞானத்தை உணர்நது ஆச்சர்யப்பட்டனர்.

இப்போது மற்றுமொரு மாறு பாடான கதையைக் கேளுங்கள். வக்கீல் தொழில் செய்துவருபவர் பாவ் சாகேப் துமால் என்பவர். தொழில் நிமித்த மாக நிபாட் என்ற ஊருக்குப் புறப்பட்டார். வழியில் சீரடிக்குச் சென்று பாபாவிடம் ஆசீர்வாதம் வாங்கிச்செல்லலாம் என்று சீரடிக்கு வந்தார் துமால்.

பாபாவின் தரிசனத்திற்கு பின்னால் பாபா, துமாலைப் பார்த்து, நீ சீரடியிலேயே தங்கியிரு. பின்னால் பேசிக்கொள்ளலாம் என்று கூறிவிட்டார். பத்து நாட்கள் கழித்து துமாலை அழைத்த பாபா நீ ஊருக்குப் புறப்படலாம் என்று கூற துமால் ஊருக்குப் புறப்பட்டார்.

இதற்கிடையில் நிபாட்டில் உள்ள அவரது கட்சிக்காரர் வயிற்று வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அன்று தான் குணமாகி வீட்டிற்கு வந்திருந்தார். துமால் பத்து நாட்கள் சீரடியில் பாபாவின் பேச்சைக் கேட்டு தங்கியதால் வீண் அலைச்சலில் இருந்து தப்பித்தார்.

ஒரு முறை பெலாப்பூரைச் சேர்ந்த நானாசாகேப் நிமோண்கர் தமது மனைவியுடன் சீரடியில் தங்கியிருந்தார். திரு. நிமோண்கரும் அவரது மனைவியும் பெரும்பாலான நேரத்தை மசூதியில் பாபாவிற்கு சேவை செய்வதிலேயே கழித்து வந்தனர். திடீரென பெலாப்பூரில் அவர்களது மகன் நோய்வாய்ப்பட்டான்.

திருமதி. நிமோண்கர் பெலாப்பூர் சென்று மகனையும் மற்ற உறவினர்களையும் பார்த்துவிட்டு சில நாட்கள் கழித்து வரலாம் என்று திட்டமிட்டாள். ஆனால் அவளது கணவனோ ஊருக்குச் சென்று மகனைப் பார்த்துவிட்டு ஒரே நாளில் திரும்பிவிட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

எனவே திருமதி. நிமோண்கருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவளுக்கு உதவ சாயியைதவிர வேறு யாரும் இல்லை. பாபாவின் உதவியை நாடி மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டாள்.

கணவனின் கட்டளையின் படி ஊருக்குப் புறப்பட்டு பாபாவிடம் சென்று அவரின் முன் சாஷ்டாங்கமாக விழுந்து ஊருக்கு போவதற்கு அனுமதி கேட்டாள்.

பாபா அவளிடம், " போ சீக்கிரம் போ, அங்கு சென்று அமைதியாகவும், குழப்ப மடையாமலும் நான்கு நாட்களுக்கு பெலாப்பூரில் இருந்துவிட்டு, உன் உறவினர்களை எல்லாம் பார்த்துவிட்டு சீரடிக்கு திரும்பு" என்றார். பாபாவின் மொழிகள் எவ்வளவு இனிமையானது. திருமதி. நிமோண்கர் பாபாவிற்கு மனதார நன்றி கூறிவிட்டு ஊருக்குத் திரும்பினாள்.

சோதிடம், கைரேகை பார்ப்பதில் கரைகண்டவரும், ஆறு சாஸ்திரங்களை கற்று அறிந்தவருமான நாசிக்கை சேர்ந்த வைதீகரான அந்தணர் திரு. முலே சாஸ்திரி ஒரு முறை நாசிக்கில் தங்கியிருந்த நாக்பூரின் புகழ்பெற்ற கோடீஸ்வரரான திரு. சீமான் பூட்டி அவர்களை சந்திக்க வேண்டி சீரடிக்கு வந்தார்.

அவரை சந்தித்த பின்பு இருவரும் சேர்ந்து பாபாவை சந்திப்பதற்காக மசூதிக்கு வந்தனர். அங்கு பாபா தனது சொந்தப் பணத்தில் பழங்களை வாங்கி மக்களுக்கு விநியோகித்துக்கொண்டிருந்தார். பாபாவை தரிசித்த முலே சாஸ்திரி, தான் புகழ் பெற்ற கைரேகை நிபுணர் என்ற வகையில் பாபாவின் கைரேகையைப் பார்க்க விரும்பி கோரிக்கை வைத்தார்.

பாபா அவரது வேண்டு கோளுக்கு செவிசாய்க்காமல் அவரது கைகளில் நான்கு வாழைப்பழங்களை வைத்துவிட்டு லெண்டிக்குப் புறப்பட்டுவிட்டார். முலே சாஸ்திரி தனது நித்ய கர்ம அனுஷ்டானங்களை செய்ய ஆரம்பித்தார்.

பிற்பாடு பாபா அருகில் இருந்த தொண்டரிடம் கொஞ்சம் சிகப்பு சாயம் எடுத்துவா, கப்னியை சாயம் நனைத்து இன்று காவி உடை உடுத்தலாம் என்று கூறினார். ஆனால் பாபா கூறியது அங்கிருக்கும் யாருக்கும் புரியவில்லை. சிறிது நேரம் கழித்து பாபா லெண்டியில் இருந்து திரும்பி வந்தார். மசூதியில் மதிய ஆரத்தி தொடங்கியது பாபா தனது ஆசனத்தில் சென்று அமர்ந்தார். அடியவர்கள் ஒவ்வொருவராக பாபாவை வணங்கி ஆசி பெற்றுச் சென்றனர். பாபா பூட்டியிடம் நாசிக்கில் இருந்து வந்திருக்கும் புது பிராமணனிடம் தட்சிணை வாங்கிவா என்றார்.

பூட்டி தாமே தட்சிணை வாங்கச் சென்றார். முலே சாஸ்திரியிடம் சென்ற சீமான் பூட்டி அவரிடம் பாபா தட்சிணை வாங்கிவரச் சொன்னதைக் கூறினார். முலே சாஸ்திரி கடுமையாக குழப்பமடைந்தார். அவர் பூட்டியிடம், நான் தூய அக்னிஹோத்திரி பிராமணன். நான் ஏன் தட்சணை கொடுக்க வேண்டும். பாபா வேண்டுமானால் பெரிய முனிவராக இருக்கலாம். ஆனால் நான் அவரின் சீடரல்ல என்றார்.

ஆயினும் பாபாவைப் போன்ற ஞானி, பூட்டியைப் போன்ற கோடீஸ்வரரிடம் தட்சிணை வாங்கிவரச் சொல்லி யிருப்பதால் அவரால் மறுக்க முடியவில்லை. ஆகவே பூட்டியுடன் உடனடியாக புறப்பட்டு மசூதிக்கு வந்தார்.

திரு. சாஸ்திரி அவர்கள் தான் உயர்ந்த பிராமணன் என்று நினைத்ததனால், மசூதியை அவர் சற்று கீழ்தரமாக நினைந்து சற்று தூரத்தில் இருந்தே தான் கொண்டு வந்திருந்த பூக்களை பாபாவை நோக்கி வீசினார். அப்போது அங்கே ஓர் அதிசயத்தைக் கண்டார் சாஸ்திரி. பாபாவின் ஆசனத்தில் பாபாவைக் காணவில்லை. ஆனால் அவருக்குப்பதில் அங்கே அவரது காலம்சென்ற குரு கோலப் சுவாமி காவி உடை அணிந்து அமர்ந்திருப்பதைக் கண்டார்.

பாபாவிற்குப் பதில் தனது குருவைக்கண்ட சாஸ்திரி செயல் இழந்து நின்றுவிட்டார். இது கனவா, நனவா என்று திகைத்தார். கண்கள் நிலைகுத்தி நிற்க விழித்தபடி பேச்சற்று விட்டார். காலஞ்சென்ற தனது குரு கோலப் சுவாமி எப்படி மசூதியில் அமர்ந்திருக்கின்றார். அந்த உண்மையை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

முடிவில் தனது ஐய்யங்களை எல்லை களைந்து விட்டு தனது குருவின் காலடியில் வந்து பணிந்து கூப்பிய கரங்களுடன் வந்து நின்றுவிட்டார். மற்ற எல்லோரும் அங்கே பாபாவிற்கு ஆரத்தி பாட்டு பாடிக்கொண்டிருக்கையில் முலே சாஸ்திரி மட்டும் தனது குருவின் பெயரை உரக்கக்கூவிக் கொண்டிருந்தார்.

தனது இனப்பெருமை, தான் கற்ற கல்வியின் மூலம் வந்த செருக்கு அனைத்தையும் தூர எறிந்து விட்டு தனது குருவின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து கண்களை இறுக மூடிக்கொண்டு தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார். பிறகு மெல்ல கண்களை திறந்து பார்த்த போது தன்னை நோக்கி பாபா கைகளை நோக்கி தட்சணை கேட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்.

பாபாவின் பேரானந்த ரூபத் தையும், சிந்தனைக்கு அப்பாற்பட்ட அவரின் சக்தியையும் உணர்ந்து கொண்ட முலே சாஸ்திரி எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தார் ஆனந்தக்கண்ணீர் வடித்தார். திரும்பவும் பாபாவை வணங்கி தட்சிணை கொடுத்தார். பாபா மீதான தனது சந்தேகம் முற்றிலும் நீங்கிவிட்டதாகவும், பாபாவிற்குப் பதில் காவி உடை அணிந்த என் குருவையே கண்டேன் என்றும் கூறினார்.

இந்த லீலையை கண்ட அனைவரும் மனமுருகிப்போ யினர். அப்போதுதான் பாபா இன்று காவி உடை உடுத்துவோம் என்று கூறியதன் அர்த்தம் புரிந்தது.

இதைப்போன்றே இன்னும் சில அடியவர்களின் அனுபவங்களை அடுத்த மாதம் அறிவோம்.

தொடரும்

வாசகர் குரல்...

நெஞ்சைத்தொட்ட கட்டுரைகள்


ஓம்சாய்ராம் இந்த மாதம் சாய் மகராஜ் குருவை தேடியில் வந்த கட்டுரைகள் அனைத்தும் மிகவும் அருமை. குறிப்பாக பாபாவின் அடையாளம் கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. மிக்க மகிழ்ச்சி.

திருமதி. இந்திரா வெங்கட்ராமன், பெங்களூர்.

ஆசிரியரும், எனது குருவுமான திரு. ஸ்ரீராம் பாபா அவர்களின் கதை வடிவிலான சாய் சரிதம் எனது ஆன்மாவைத் தொட்டது. பட்டினத்தார் ஞானம் இதயத்தைக் கவர்ந்தது. திரு. அகஸ்டின் அவர்களின் குருவுடன் மூன்று நாள் பயணம் ஆனந்தமாகவும், பொறாமையாகவும் இருந்தது. பாபாவின் அடையாளம் கட்டுரையில் பாபாவை தெரிந்து கொண்டேன். உண்மையில் ஆன்மீகத்தின் சிறப்பு சாயி மகராஜ் குருவைத் தேடி இதழ் என்றால் அது மிகையல்ல!

திருமதி. இந்துமதி. அயனாவரம்.

நமது குரு ஸ்ரீராம் பாபா அவர்களின் அமுத மொழியில் உனக்கு எல்லா சூழல்களிலும் நான் துணையாக நிற்பேன். என்ற வார்த்தையும், முப்பிறவியில் நாம் செய்த நற்செயல்களால் நாம் சாய் நாதருடைய திருவடிகளை அடைந்திருக்கின்றோம். என்ற வார்த்தையும் என் வாழ்நாளில் மறக்க முடியாது. மேலும் பாபா அவர்கள் பரம்பொருளின்



அடையாளமாகவே வாழ்ந்து இருக்கிறார். நாங்களும் பாபா அவர்களால் இழுக்கப்பட்ட சிட்டுக் குருவிகளாக இருக்கிறோம். இவ்விதழில் பட்டினத்தார் ஞானமும் மற்றும் அன்றாடம் சமையலில் உபயோகிக்கும் பூண்டின் பண்புகளையும் தெரிந்து கொண்டேன். நன்றி குருவே! குருவே சரணம்.

திருமதி. தனம் அகஸ்டின், குன்றத்தூர்.

இம்மாத இதழில் வெளிவந்த சாயி நாதரின் தனித்துவம், மற்றும் பாபாவின் அடையாளம்

ஆகியவை என் நெஞ்சைத்தொட்ட கட்டுரைகள். மற்றபடி எப்போதும் போல் பெட்டிச் செய்திகள் சிறப்பு. தொடரட்டும் உங்கள் பணி.

புலவர். இளவழகன், கோவிலடி.

சாய் சரிதம் அனைவரும் படிக்கும்படி எளிமையான பேச்சுத் தமிழில் இருப்பதற்கு எனது நெஞ் சார்ந்த நன்றிகள் சாய்ராம். இதுவரை படித்த சத்சரிதத்திலேயே நீங்கள் எழுதுவது மிக எளிதாகப் புரிகின்றது. அவசியம் தொடர் நிறைவு பெற்றதும் தனிப்புத்தகமாக வெளியிடவும். புதிய பாபா பக்தர் களுக்கு எளிதாகப் புரியும் என்பது எனது எண்ணம். நன்றி சாய்ராம்.

திரு. கோவிந்தராஜன். திருநகர், மதுரை.

பட்டினத்தார் ஞானம் கட்டுரை சிறப்பாக இருந்தது. இருந்தாலும் பட்டினத்தாரின் ஞானம் இதுமட்டுமல்ல. அதற்கு எல்லையே இல்லை. முடிந்தால் பட்டினத்தாரின் பாடல்களுக்கு விளக்கம் எழுதலாம் என்னைப் போன்ற பட்டினத்தாரின் பக்தர்கள் பயன்பெறுவர்.

திரு. வீரபாண்டியன், திருவொற்றியூர்.

குருவிடம் இருந்து கற்றதும், பெற்றதும் இன்னும் சற்று விரிவாக இருக்கலாம் என்பது எனது கருத்து. ஏற்கனவே குருவின் பேச்சை கேட்டவர்களுக்கு வேண்டுமானால் தெளிவாக புரியும். கேட்காதவர்களுக்கு சற்று புரியாதபடி தோன்றுகின்றது.

திருமதி.காந்திமதி, திண்டிவனம்.

திருவருள்தேடி, சத்சரிதம் தொடர்கள் நன்றாக இருக்கின்றது. பெட்டிச்செய்திகள் சூப்பர். சின்ன செய்திகளாக இருந்தாலும் நச் சென்று இருக்கின்றது. என்ன இருந்தாலும் எனக்கு மிகவும் பிடித்தது. அமுத மொழி தான். மாதாமாதம் எனக்காகவே சாய் அப்பா கூறுவதைப் போன்று இருக்கும். நன்றி!

செல்வி.கவிதா, கும்பகோணம்.

குருவுடன் மூன்று நாள் பயணக்கட்டுரை சிற்பாக இருந்தது. குரு அவர்களே எங்களது ஊருக்கும் வாருங்கள். நாங்களும் உங்களை தரிசிக்கும் பாக்கியத்தை கொடுங்கள். உங்களது பணிகள் அனைத்தையும் புத்தகத்தின் வாயிலாகவும், வலைத்தளத்தின் மூலமாகவும் கண்டு ரசிக்கின்றோம். உங்களது இந்தப் புனிதப்பணி தொடரட்டும். வாழ்க வளமுடன்.

திரு. ரஞ்சித்குமார். பட்டீஸ்வரம்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 99418 16692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. லோகநாதன், கொரட்டூர். ரூ.3750

திரு. பாலகிருஷ்ணன், அண்ணாநகர். ரூ.3000.

திருமதி. ஹேமாவதி நமச்சிவாயம், சாலிகிராமம். ரூ.2000.

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.2000.

திரு. அகஸ்டின், குன்றத்தூர். ரூ.1500.

திரு. மைஸ்ட்ரீன் ராஜசேகர், குரோம்பேட்டை. ரூ.1500.

திருமதி. சுகன்யா மகேஷ், ரூ.1500.

ஸ்ரீ சாய் மகராஜ், சென்னை. ரூ.1000.

திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.

திருமதி. ஜெயசூர்யா, பெங்களூர். ரூ.1000

திருமதி. லலிதா, துரைப்பாக்கம், ரூ.500.

திருமதி.மகாலட்சுமி முருகன். மதுரை. ரூ.500.

திருமதி.வாழ்க வளமுடன் சுமதி, கொளத்தூர். ரூ.500.

திரு. விக்னேஷ், கிர்கிஸ்தான். ரூ.500.

திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திரு. பாபு லதா, வேப்பம்பட்டு, ரூ.500

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி.ரூ.500

திரு. ஜானகி கண்ணன், அயநாவரம். ரூ.500

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.400.

திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.

திரு. வா.சூரியகுமார். கேபிள் டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.

திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.

திருமதி. ராஜேஸ்வரி,ராமநாதபுரம். ரூ.100.

திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.100.

திருமதி. பிச்சையம்மாள், பெரம்பூர். ரூ.100.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 320 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 850 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா – ரூ.1,400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு.3,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர் 99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. காசிநாதன், மதுரை. ரூ.501.
திரு. அனந்தராமன், காஞ்சிபுரம்.ரூ.500.
திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி.ரூ.500
திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரம்பூர்.ரூ.200.
திரு. வேணுகோபால், நங்கநல்லூர்.100.
திரு. ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், .நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.

போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.




தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:

சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்

9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068